Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 485 பிலவ வருடம், பங்குனி மாதம் 09ஆம் திகதி புதன்கிழமை (23.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 19, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30



## அமெரிக்க இராஜதந்திரிகள் மூவர் கொழும்பு வருகை

02 பக்கம்

## மக்கள் பாதிப்புக்கான பொறுப்பை அரசு ஏற்கிறது!

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண



● யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருக்கும் மக்கள் பாதிக்கப்படுவதற்கு அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்கின்றது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

02 பக்கம்

# இலங்கை தேர்தல் இந்திய நிதியில்!

## சபையில் சஜித் சரமாரி குற்றச்சாட்டு



### தம்முடன் ஆலோசனை நடத்தியே இந்தியா, இலங்கை அரசுக்கு நிதியுதவியளித்ததாகவும் குறிப்பிட்டார் பிரேமதாஸ

பொருளாதார நெருக்கடிக்காக இந்தியா வழங்கிய நிதியுதவியை பயன்படுத்தி உள்ளூராட்சி தேர்தலை நடத்த ஆட்சியாளர்கள் முயல்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப் பொன்றை விடுத்து உரையாற்றிய சஜித் மேலும் கூறியதாவது,

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவ முன்வந்த இந்தியா அந்த உதவிகளை வழங்க முன்னர் எங்களுடன் ஆலோசித்து அபிப்பிராயம் கேட்டது.

இந்த நிலைமையில் இலங்கைக்கு உதவிகளை செய்வதை நாங்கள் வரவேற்றோம். அதற்கு சம்மதம் தெரிவித்தோம்.

02 பக்கம்

## மின் மற்றும் நீர் கட்டண அதிகரிப்பு; அமைச்சரவையில் பேசவில்லை!

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் தகவல்

● யோ.தர்மராஜ்

மின் மற்றும் நீர் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பாக இதுவரை அமைச்சரவையில் பேசப்படவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

02 பக்கம்

## சீரான எரிபொருள் விநியோகம் நடப்பதை உறுதிசெய்யவே இராணுவம் சேவையில்!

### அமைச்சர் ரமேஷ் அறிவிப்பு

● யோ.தர்மராஜ்

நாட்டில் டீசல் தட்டுப்பாடு இருந்தாலும் தேவையான பெற்றோல் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளபோதிலும், குறிப்பிட்ட தரப்பினர் அவற்றை பதுக்கிவைப்பதனால் மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே, எரிபொருளை உரிய முறையில் மக்களுக்கு விநியோகிக்கின்றனரா என்பதை ஆராய்வதற்கே இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

02 பக்கம்

## இராஜாங்க அமைச்சர் லான்சா இராஜினாமா



கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நிமல் லான்சா இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அவர் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டு மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இந்த தருணத்தில், வெறுமனே தம்மால் அதை வேடிக்கை பார்க்க முடியாது என நிமல் லான்சா தனது இராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்



அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இராணுவத்தை நிலைநிறுத்த அரசு தீர்மானித்ததையடுத்து யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நிலையமொன்றின் முன்னால் படையினர் நிற்கும் காட்சி.

(படம்:- ஐ.சிவசாந்தன்)

கமெண்ட் கந்தர்..



உலகில மிக சந்தோஷமான நாடு பின்லாந்தாம் ... உலகில கூடுதலா மக்கள் வரிசையில நிக்கிற நாடு எது எண்டு வந்தா ஸ்ரீலங்காவ யாராலயும் வெல்ல ஏலாதுங்கோ...

## கலவரத்தை உண்டாக்க எதிர்க்கட்சிகள் சூழ்ச்சி

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் கருத்து

● யோ.தர்மராஜ்

நாட்டிலுள்ள குறிப்பிட்ட தரப்பினர், போராட்டக்காரர்களுக்கு மத்தியில் மோதலை தோற்றுவித்து, அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுடன், போராட்டக்காரர்கள் மீது தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்துவதன் ஊடாக நாட்டில் கலவரம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலேயே சில எதிர்க் கட்சிகள் செயற்படுகின்றன. ஆனால், பாதுகாப்பு தரப்பினர் பொறுமையாகவே செயற்படுவதாகவும் அவர்கள் சட்டத்தை ஒருபோதும் தவறாக பயன்படுத்தமாட்டார்கள் என்றும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

02 பக்கம்

## எரிபொருள் விநியோகம்; இராணுவ கண்காணிப்பு


எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் காத்திருக்கும் மக்கள் மற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## இந்தியாவுடனான உடன்படிக்கைகளை உடனடியாக பகிரங்கப்படுத்துங்கள்

### எல்லே குணவங்ச தேரர் அரசிடம் கோரிக்கை



இந்து சமுத்திரத்தின் கடல் பாதுகாப்பு குறித்து இலங்கை மற்றும் இந்தியா இடையே கைச்சாத்திடப்படவுள்ள 3 உடன்படிக்கைகள் தொடர்பில் உடனடியாக மக்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும் அம்பலப்படுத்துமாறு எல்லே குணவங்ச தேரர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாக இந்திய ஊடகமொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதென தேரர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் பெறப்பட்ட போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை... 02 பக்கம்

## பணவீக்கம் சடுதியாக அதிகரிப்பு

● நமது நிருபர்

நாட்டின் பணவீக்கம் 17.5 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இதுவே இதுவரைக் காலம் பதிவாகிய பணவீக்க கணிப்பீடுகளில் அதிகூடியதாகும்.

02 பக்கம்




நிமல் லான்சாவின் தேர்தல் தொகுதியில் இரண்டு வீதிகள் அவருக்கு அறிவிக்காமலேயே திறக்கப்பட்டனவாம்.

அதனால்தான் கோபத்தில் இராஜாங்க அமைச்சுப் பதவியை அவர் துறந்தாராம். ராஜபக்ஷ சகோதரர்கள் செய்த சமாளிப்புகேஷன் ஒன்றுக்குமே அவர் இணங்கவில்லையென தகவல்.

சில மாதகாலங்களுக்கு அவர் அவுஸ்திரேலியா சென்று தங்கியிருக்கப்போவதாகவும் தகவல்.

## லொக்குகேவின் சாரதி படுகொலை

### பிரதான சந்தேக நபர் கைது

● நா. தினுஷா

வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதி, நேற்று முன்தினம் இரவு பிலியந்தலை, மாவித்தர பிரதேசத்திலுள்ள அவரின் வீட்டுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவரினால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை, மாவித்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஏபாசிங்கே கனிஷ்க (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரொருவர் நேற்று களுபோவில பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப் பட்டதாக கெஸ்பேவ பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் கைதுசெய்யப்படவுள்ளதுடன் இந்தச் சம்பவம்... 02 பக்கம்

## ஜீ.எல்.பீரிஸின் அமைச்சில் மாற்றம்

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை குறித்த பதவியிலிருந்து நீக்கி, மீண்டும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக நியமித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் கையொப்பமிட்ட 2272/04 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் இது வெளியிடப் பட்டுள்ளது.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு வெளிநாட்டு அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அவர் மீண்டும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## மிகை வரிச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டது

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு



மிகை வரிச் சட்டமூலம் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டது என உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை கூடிய நாடாளுமன்ற அமர்வின்போது பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சபாநாயகரின் அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பு பின்வருமாறு,

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் “மிகைக்கட்டண வரி” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத் திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட... 02 பக்கம்

# மண்ணெண்ணெய் பெற ஹட்டனில் நீண்ட வரிசை





மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக நேற்று (22) காலை முதல் ஹட்டனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். மின்வெட்டு மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக சமைக்க மற்றும் வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதாக ஹட்டன் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். மண்ணெண்ணெய் பெற வந்த வாடிக்கையாளர்களுக்கு 05 லீற்றர் மாத்திரமே வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்து மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக பிரதான வீதியின் ஓரத்தில் நீண்ட வரிசையில் மக்கள் நின்றிருந்தனர். (படங்கள்: - க.கிஷாந்தன்)

## பரந்துபட்ட கூட்டணியை அமைக்க விசேட குழு சஜித்தால் நியமனம்

பரந்த பொதுக் கூட்டணி வேலைத்திட்டத்தை கட்டியெழுப்ப எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் ஐவர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி நேற்று (22) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இன்று எமது நாடு அதன் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நொடிக்கு நொடி அந்த நெருக்கடி தீவிரமடைகிறதே தவிர, அதிலிருந்து மீள்வதற்கான நடைமுறை ரீதியான தலையீடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதோடு, மாறாக தற்போதைய ஆட்சியில் இந்த நெருக்கடியே நம் நாட்டை அதலபாதாளத்தின் பக்கம் தள்ளிக்கொண்டே இருக்கிறது.

அனைத்து முனைகளிலும் அராஜகத்தின் விளிம்பில் இருக்கும் நாடாக இலங்கை மாறிவிட்டது என்பதோடு, அரசாங்கம் முழு நாட்டையும் மரணத்தின் விளிம்பிற்கு தள்ளுவதையே செய்தவண்ணமுள்ளது. இந்த துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையிலிருந்து நம் நாட்டைக் காப்பாற்ற மிகவும் பிரயோக ரீதியாக கூட்டு முயற்சியின் தேவை தீவிரமாக உணரப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி தலைமை மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையின் வழிநடத்துதலின் பிரகாரம் செயற்படும்வண்ணம் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்ததாக ஒரு பரந்த கூட்டணியை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை இலக்காகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பணிப்புரையின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் ஐவர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசிம், தலதா அத்துகோரள, எரான் விக்ரமரத்ன ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

**உணவுக்குத் தட்டுப்பாடென சுட்டிக்காட்டி**

## இலங்கையர் அறுவர் தமிழகத்தில் தஞ்சம்

இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியாவின் தனுஷ்கோடி அருகேயுள்ள மணல் திட்டு பகுதிக்கு கைக்குழந்தையுடன் சென்றுள்ள ஒரு தம்பதி உட்பட 6 பேரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தமிழக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

கடல் எல்லையில் கடலோர பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்துவரும் நிலையில், நேற்று அதிகாலை 3 மணியளவில் இலங்கையிலிருந்து கைக்குழந்தையுடன் ஒரு தம்பதி உட்பட 6 பேர் தனுஷ்கோடி அருகேயுள்ள மணல் திட்டு பகுதிக்கு வந்திறங்கியுள்ளனர்.

மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான ஹேவார்கிரப்ட் கப்பல் மூலம் அவர்களை மீட்டு பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

### பணவீக்கம் சடுதியாக....

மார்ச் மாத முதல் வாரத்தில் பணவீக்கம் 16.8 வீதமாக அமைந்திருந்தது. இந்நிலையில், அது மேலும் அதிகரித்திருப்பதானது பொருட்கள் சேவைகளின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பணவீக்கம் 5.7 வீதமாகக் காணப்பட்டது. அதே வருடம் டிசம்பர் மாதம் 4.2 வீதமாகக் குறைவடைந்ததுடன், 2021 ஜனவரி மாதம் மூன்று வீதமாக மேலும் குறைவடைந்தது. 2021 செப்டெம்பர் மாதம் பணவீக்கமானது மீண்டும் 5.7 வீதமாக உயர்வடைந்தது. அதன்பின்னர் பணவீக்கத்தில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டு வருகிறது.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14.2 வீதமாகக் காணப்பட்டதுடன், பெப்ரவரி மாதம் 15.1 வீதமாக பணவீக்கம் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை தேர்தல்...

ஆனால், அந்த உதவிகளை பெற்ற ஆட்சியாளர்கள் அதனைக்கொண்டு தேர்தலொன்றுக்கு தயாராகின்றனர். நாடளாவிய ரீதியில் 14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளில் ஹோம் ஷொப் என்ற பெயரில் கடைகளை திறக்கவும், நிவாரண கூப்பன் என்ற பெயரில் இரண்டாயிரம் ரூபாவையும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். இப்படி தாமரை மொட்டு அலுவலகங்களை திறக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தியாவின் உதவிகள் இதற்காகவா வழங்கப்பட்டன? இந்த உதவிகளை வழங்க முன்னர் அவர்கள் எங்களிடமும் ஆலோசித்தார்கள். நாங்கள் எங்களது அங்கீகாரத்தை வழங்கினோம். ஆனால், அதனை இப்படி துஷ்பிரயோகம் செய்வது சரிதானா?

இந்திய நிவாரண உதவிகள் தொடர்பில், அவை பயன்படுத்தப்பட்டமை குறித்து இந்த நாடாளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தேர்தலொன்றுக்கு நாம் பயப்பட வில்லை. ஆனால், இந்தியாவின் உதவிகளை எடுத்து அரசியல் செய்யவேண்டாமென்றே கூறுகிறோம்.

நாட்டின் மக்கள் பசி பட்டினியால் வாடுகின்றனர். எரிபொருள், சமையல் எரிவாயு, பால்மா இல்லாமல் மக்கள் வரிசைகளில் நின்று வாடுகின்றனர். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். நாட்டில் மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றை கவனிக்காமல் அரசாங்கம் செயற்படுகிறது - என்றார் சஜித்.

### மின் மற்றும் நீர் ...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, மின் மற்றும் நீர் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் மற்றும் நீர்க் கட்டணங்கள் அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவையில் பேசப்படவில்லை. ஆனால், ரயில் கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படுத்த நேரிடலாம் என்ற யோசனையை கடந்த அமைச்சரவையில் போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம முன்வைத்திருந்தார்.

எனினும், தற்போதைய விலை அதிகரிப்புகள் அனைத்தும் டீசல் மற்றும் பெற்றோல் விலை அதிகரிப்பிலேயே தங்கியுள்ளது. இதனால், ரயில் சேவைகள், மின்சாரத்துறை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன நட்டத்தில் இயங்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டன.

ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இந்த நட்டத்தை மக்கள் சுமக்கவேண்டிவரும் என்பது உண்மையாகும். எனவே, இந்தத் துறைகளை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கு உரிய நிதித் திட்டத்தை வழங்கவேண்டும்.

எனினும், மின் மற்றும் நீர்க் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அமைச்சரவையில் பேசப்படவில்லை – என்றார்.

### மிகை வரிச் சட்டமூலம் ...

மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

சட்டமூலத்தின் ஏற்பாடுகளை முற்றுமுழுதாகப் பரிசீலனை செய்யுமிடத்து, சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரை அல்லது 13ஆம் உறுப்புரைகளுக்கு ஒவ்வாதனவாக இராது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் "மிகைக்கட்டண வரி" எனும் இச்சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றலாம் என உயர் நீதிமன்றம் மேலும் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய (நேற்று) கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிவிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன் - என்றார்.

### இந்தியாவுடனான...

தொடர்பாகவும் இதுவரை நாட்டிற்கு வெளிக் கொணரப்படவில்லை என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கை – சீனா இடையே திடீரென வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள தேரர், சொற்பத்தொகை பணத்திற்காக வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் வேறு மாகாணங்களிலுள்ள தேசிய வளங்களை கொள்ளையிடுவதற்கு அல்லது தாரை வார்ப்பதற்கான சதிகள், திட்டங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு தாம் தயார் என எல்லே குணவங்ச தேரர் இதன்போது தெரிவித்தார்.

### அமெரிக்க இராஜதந்திரிகள்...

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி செயலாளர் விக்டோரியா நுலாண்ட்(Victoria Nuland), இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று (22) நாட்டிற்கு வருகை தந்தார்.

இராஜாங்க திணைக்களத்தின் பிராந்திய மற்றும் இருதரப்பு கொள்கை தொடர்பான சிக்கல்களை அவர் கண்காணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின்போது விக்டோரியா நுலாண்ட், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

இன்று (23) வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ள இலங்கை – அமெரிக்க கூட்டு பேச்சுவார்த்தையின் நான்காவது அமர்வுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பிரதி செயலாளர் நுலாண்ட் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி செயலாளர், கொழும்பு துறைமுகத்திற்கு விஜயம் செய்து வர்த்தக சமூகத்தினர் மற்றும் சிவில் சமூகத்தினரை சந்திப்பார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை – அமெரிக்க கூட்டு பேச்சுவார்த்தை 2019ஆம் ஆண்டு வொஷிங்டனில் நடைபெற்றது.

இருதரப்பு உறவுகளை மீளாய்வு செய்வதற்கும் இலங்கை மற்றும் அமெரிக்காவிற்கு இடையில் தற்போதுள்ள ஒத்துழைப்பு மற்றும் உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்கும் இந்த சந்திப்பு முக்கியமான களமாக இருக்கும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் டொனால்ட் லூ மற்றும் இந்திய – பசிபிக் பாதுகாப்புக்கான துணை பாதுகாப்பு செயலர் அமண்டா டோரி ஆகியோரும் உப செயலாளர் நுலாண்டுடன் நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

### இராஜாங்க அமைச்சர்...

மேலும், சிறப்புரிமை மற்றும் அதிகாரம் ஆகியவற்றை கடந்து தான் எப்போதும் மனச்சாட்சிக்கு கட்டுப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள இராஜினாமா கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், பொதுமக்களுக்கு உயரிய சேவைகளை வழங்கவும் தனக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியை வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் நிமல் லான்சா தனது இராஜினாமா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### கலவரத்தை உண்டாக்க...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினரை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இதற்கு முன்னர் எந்தவொரு ஆட்சியிலும் இருந்ததில்லை. இதற்கு முழு சுதந்திரத்தையும் ஜனாதிபதி வழங்கியுள்ளதே காரணமாகும். கடந்த வாரத்தில் ஜனாதிபதி செயலகத்தின் நுழைவாயிலை உடைத்துக்கொண்டு போராட்டக்காரர்கள் உள்ளே நுழைந்தனர். எனினும், பாதுகாப்புத் தரப்பினர் பொறுமையாகவே செயற்பட்டனர்.

2 வருடங்களில் எந்தவொரு போராட்டக்காரர்கள் மீதும் தடியடியோ, தண்ணீர் தாரை பிரயோகமே முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், தற்போது, ஆயிரக்கணக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், சில அரச சொத்துகளை பாதுகாப்பதற்கு பாதுகாப்புத்துறையினருக்கு பொறுப்புண்டு. அதற்கமையவே, அவர்கள் செயற்படுகின்றனரே தவிர, எச்சந்தர்ப்பித்திலும் சட்டத்தை தவறாக பயன்படுத்தமாட்டார்கள். அதற்கு ஜனாதிபதியினால் விசேட ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட சில தரப்பினர், போராட்டக்காரர்களுக்கு மத்தியில் மோதலை தோற்றுவித்து, அரசியல் இலாபத்தை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஆனால், பாதுகாப்புத் தரப்பினர் மீது சிலர் தாக்கினாலும் அவர்கள் பொறுமையாகவே செயற்படுகின்றனர். ஆனால், போராட்டக்காரர்கள் மீது தடியடி, துப்பாக்கிச்சூடு நடத்துவதன் ஊடாக நாட்டில் கலவரம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலேயே சில எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன - என்றார்.

### சீரான எரிபொருள்...

அத்தோடு, எரிபொருள் நிலையங்களில் இராணுவத்தினரை நிறுத்தியிருப்பது மக்களின் நன்மைக்காகவே தவிர, மனித உரிமைகள் மீறுவதற்கானதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினரை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மனித உரிமைகள் மோசமான நிலைமைக்கு தள்ளப்படும் வகையில் கடந்த 2 வருடங்களில் எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை. வரலாற்றில் சில சில சந்தர்ப்பங்களில் பொது சேவைகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த இரு நாட்களுக்கு மேலாக நாட்டில் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நிதி நெருக்கடியால் கடன் பத்திரங்கள் விடுக்க முடியாதமையினால் இந்த நிலைமை ஏற்பட்டது.

ஆனால், நாட்டுக்குத் தேவையான பெற்றோல் தொகை கையிருப்பில் இருந்தது. தற்போதும் இருக்கின்றது. எனினும், கடந்த நாட்களில் பெற்றோல் விநியோகிக்கும் பல எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. டீசல் தட்டுப்பாடு இருந்தாலும் அனைத்து நிலையங்களுக்கும் தேவையான பெற்றோல் விநியோகிக்கப் பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இருந்தும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் பெற்றோலை பெற்றுக்கொள்வதற்கான வரிசைகளும் அதிகரித்தன.

குறிப்பிட்ட தரப்பினர் திட்டமிட்ட வகையில் பெற்றோலை பதுக்கிவைப்பதாக பல்வேறு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. எனவே, பெற்றோல் உரிய முறையில் விநியோகிக்கப் படுகின்றதா என்பதற்கே இராணுவத்தினர் உதவியை பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

எனவே, எரிபொருள் நிலையங்களில் இராணுவத்தினரை நிறுத்தியிருப்பது மக்களின் நன்மைக்காகவே தவிர, மனித உரிமைகள் மீறுவதற்கானதல்ல – என்றார்.

### மக்கள் பாதிப்புக்கான...

அத்தோடு, நாட்டின் தற்போதுள்ள சில பிரச்சினைகள் தங்களுடைய கட்டுப்பாட்டை மீறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, பொருட்களை பெற்றுக் கொள்ள வரிசையில் காத்திருக்கும் மக்கள் மரணிப்பது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மிக முக்கியமானதாக மாறியுள்ளது. இந்த நிலையில் வரிசையில் காத்திருந்து மக்கள் பாதிக்கப்படுவதற்கு அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்கின்றது.

77 ஆம் ஆண்டுக்கு பின்னரான பொருளாதார நெருக்கடிகள் 2020, 21 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொரோனா தொற்றினால் மேலும் உக்கிரமடைந்தது என்பது நாங்கள் அனைவரும் அறிந்த விடயமாகும். இந்த நிலையில், அரசாங்கத்தின் செலவுகளை குறைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பல்வேறு தியாகங்களை செய்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். சில சில முடிவுகளை எடுப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே காணப்படுகின்றன. எனினும், அரசாங்கம் என்ற ரீதியில் முடிந்தவரை இதனை கட்டுப்படுத்துவதற்கே முயற்சிக்கின்றோம்.

நாட்டின் தற்போதைய சில பிரச்சினைகள் எங்களுடைய கட்டுப்பாட்டை மீறியுள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் சுற்றுலா பயணிகளின் வீழ்ச்சி என்பன எங்களுடைய கட்டுப்பாட்டை மீறியுள்ளது என்பதும் அனைவரும் அறிந்த விடயமாகும். எனினும், முடிந்தவரை நடவடிக்கை எடுப்பதற்கும் தியாகங்களையும் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

### லொக்குகேவின்...

தொடர்பில் விசேட பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தனிப்பட்ட பிரச்சினை வலுவடைந்தமையினால் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கெஸ்பேவ, மாவித்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இரவு 7 மணியளவில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதியாக கடமையாற்றிய நபர் அவரின் வீட்டுக்கு அருகில் அமர்ந்திருந்தபோது இன்னுமொரு நபருடன் இடம்பெற்ற முரண்பாடு காரணமாக இந்த மோதல் நிலைய ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் சம்பந்தப்பட்ட நபர் சிறிது நேரத்தின் பின்னர் மேலும் சிலரை அழைத்துவந்து அவரை தாக்கியுள்ளார். அதனை தொடர்ந்தே அவர் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் அமர்ந்திருந்தபோது, அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் மோட்டார் சைக்கிளில் பல முறை மிகவும் வேகமாக அபாயகரமான முறையில் பயணித்துள்ளார்.

அதனை தொடர்ந்து உயிரிழந்த நபர் இவ்வாறு வேகமாக மோட்டார்சைக்கிள் செலுத்த வேண்டாம் என்றும், அது அபாயகரமானது என்றும் தமது வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சம்பந்தப்பட்ட நபருக்கு அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்தே இருவருக்கும் இடையில் முரண்பாட்டு நிலை உருவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து, மோட்டார்சைக்கிள் சாரதி, அவரின் தந்தை, சகோதரர் உள்ளிட்ட மேலும் இருவர் மீண்டும் உயிரிழந்த நபரின் வீட்டுக்கு வந்து அவரை தாக்கியுள்ளனர். தடி, கூரிய ஆயுதம், கண்ணாடி போத்தல் என்பவற்றால் தாக்கியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட நபர்களில் மோட்டார் சைக்கிள் சாரதியின் நண்பர்களிக் இவரும் உள்ளடங்குவதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்நிலையிலேயே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் கல்கிசை குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் தற்போது களுபோவில வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார். ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# இன்றைய ராசி பலன்

**23.03.2022 புதன்கிழமை பங்குனி 09**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: அனுஷம்**
மாலை 6.53 வரை
**கேட்டை**
மாலை 6.53 - 24.03.2022
மாலை 5.30 வரை
**யோகம்: சித்தி**
காலை10.20 -24.03.2022
காலை 7.29 வரை

**திதி: அமர பட்ச ஷஷ்டி**
அ.கா 4.21 - 24.03.2022
அதிகாலை 2.16 வரை
**முற்கரணம்: கரஜம்**
அ.கா 4.21 - மாலை 3.19
பிற்கரணம்: வணிஜம்
மாலை 3.19 - 24.03.2022
அதிகாலை 2.16 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.13 - 7.43
மாலை 3.19 - 4.50

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 12.17 - 1.48

**குளிகை காலம்**
காலை 10.46 - பி.ப 12.17
**எமகண்ட காலம்**
காலை 7.44 - 9.15
**துர் முகூர்த்தம்**
காலை 11.53 - பி.ப 12.41

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** சந்தைப்படுத்தும் தொழில் செயல்களில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். உறவுகளின் உதவி கிடைக்கப் பெறலாம். உடல் நலத்திலும் கவனம் தேவைப்படலாம். வேலைகளில் சக பணியாளர்களுடன்அன்புடன் இருப்பது நல்லது. இறைவணக்கம் நன்மை. **சந்திராஷ்டமம்: அசுவினி நட்சத்திரத்திற்கு பிற்பகல் 1.13வரை, பரணி நட்சத்திரத்திற்கு பி.ப 1.13-24.03.2022 காலை11.51வரை**

**ரிஷபம்:** வணிகத்தில் முக்கிய ஒப்பந்தங்களின் வேலைகள் நிறைவேறலாம். இன்று நீண்டகால இலாபத்திற்கான பங்குச் சந்தை முதலீடுகள் செய்யப்படலாம். வீட்டுவேலை களில் உற்சாகம்மேம்படும். காதல், திருமணபந்தமாக மாறலாம்.

**மிதுனம்:** வேலைத்தளத்தில் மேலதிகாரி எதிர்பார்க்கும் பணித்திறனை அதிகப்படுத்தும் தேவை ஏற்படலாம். வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடுகள் மறந்து இருப்பது நன்மை. மனக்கவலை சோர்வை உண்டாக்கலாம். உங்கள் மீதான எதிர்ப்பு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**கடகம்:** செயல்களில் நிதானம் மற்றும் நேர்மறை எண்ணம் தேவைப்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஈடுபாடு தேவைப்படலாம். புதிய ஒப்பந்தம் அல்லது தொழில் உங்களால் பொறுப்பேற்கப்படலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வருவாய் நிலை உண்டாகலாம். பழைய பிரச்சினைகளால் மேலும் தொந்தரவு உண்டாகலாம். இறைவணக்கம் தேவை.

**சிம்மம்:** அன்னையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வதந்திகள் அல்லது மோசடியான அழைப்புகளில் கவனம் தேவைப்படலாம். கவனக் குறைவால் சில இழப்புகளும் ஏற்படலாம். தம்பதியரிடையே விட்டுக்கொடுத்தல் நன்மை. இறைதியானம் நன்மை.

**கன்னி:** புதிய தொழில் முதலீடுகள் செய்யப்படலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வேலை தேடுவோருக்கு நல்ல பணி கிடைக்கலாம். நண்பர்களின் ஆலோசனையால் நன்மை கிடைக்கலாம்.

**துலாம்:** சுயநலமற்ற உதவி செய்வதை நிறுத்தவேண்டாம். கட்டுமான பணிகள் தாமதமடையலாம். பிறரின் மீது வைத்துள்ள நம்பிக்கை விடயங்களில் கவனம் தேவைப்படலாம். நிதிப் பிரச்சினைகள் மனக் கவலை தரலாம்.

**விருச்சிகம்:** பணிக்கான நேர்முக தேர்வுகளில்நல்ல சாதகமான நிலை உண்டாகலாம். உங்கள் கருத்தை பிறர் ஏற்கும் வற்புறுத்தலை தவிர்ப்பது நல்லது.வணிகத்தில் புதிய பங்குதாரர்களை இணைக்கும் விடயங்களில் வெற்றி கிடைக்கலாம். வேலைகளில் உங்கள் பணித்திறன் பாராட்டப்படலாம். புதிய பணிக்கு செல்லும் விருப்பம் உண்டாகலாம்.

**தனுசு:** அனுபவசாலிகளின் ஆலோசனையால் செய்யப்படும் முதலீடு மட்டுமே நன்மைதரலாம். அன்புக்குரியவர்களுடன் பேசும்போது நிதானம் தேவைப்படலாம். இன்று மனக்கவலை உருவாகலாம். வாழ்க்கைத்துணையுடன் வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**மகரம்:** பங்குச்சந்தை முதலீட்டு லாபங்கள் அதிகரிக்கலாம். நிதி பரிவர்த்தனையில் கவனம் தேவைப்படலாம். வருவாய் நிலையில் உறுதித்தன்மை மேம்படும். உடல்நலம் சீராகும். இன்று மனதில் உற்சாகம் அதிகரிக்கலாம்.

**கும்பம்:** தொழிலதிபர்களுக்குதங்கள் தொழில் பணி முறைகளில் கவனம் தேவைப்படலாம். செலவுகளை கட்டுப்படுத்துவதிலும் கவனம் தேவைப்படலாம. பணியில் இருப்பவர்கள் அலுவலக பதற்றத்தை வீட்டிற்கு கொண்டு வராமல் இருப்பதில் கவனம் தேவைப்படலாம்.

**மீனம்:** நண்பர்களுடன் மகிழ்ச்சியான நாளாக அமையலாம். உங்கள் பொறுப்புகளில் இன்று அர்ப்பணிப்பு உண்டாகலாம். பொறியியலாளர்களுக்கு பதவி உயர்வு அல்லது புதிய பணிக்கான வாய்ப்பு உருவாகலாம். பணிகளில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம்.



**முகத்துவாரம் ஸ்ரீவெங்கடேஷ்வர மஹா விஷ்ணு ஆலயத்தின் தர்மகர்த்தா துரைசாமி செட்டியார், அண்மையில் பசு கன்றொன்றை கொழும்பு கங்காராம விகாரைக்கு இலவசமாக அன்பளிப்பு செய்துள்ளார். இதன்போது அகில இலங்கை ஸ்ரீசாதஸ்ரூபன் யாத்திரைக் குழுவின் தலைவரும் குருசாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

# காட்டிக்கொடுக்குமளவுக்கு நாட்டில் பிரச்சினை இல்லை!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சுட்டிக்காட்டு



நாட்டிலுள்ள பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். தற்போது நாட்டிலுள்ள பிரச்சினைகள் காட்டிக்கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் இல்லை. எந்தவொரு நெருக்கடி நிலையாக இருந்தாலும் அதனை ஜனநாயக ரீதியாக எதிர்கொள்ள எமது அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அமைக்கப்படும் வீதி அபிவிருத்தி பணிகள், பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த பாலங்களை உண்ணுவதற்காகவா நிர்மாணிக்கிறார்கள் என கேள்வி எழுப்பும் சிலரும் இருக்கிறார்கள். ஆனால், நிர்மாணிக்கப்படும் பாலங்களின் பெறுமதி நாட்டில் வாழும் மக்களுக்கே தெரியும். பல்வேறு சிரமப்பட்டு பயந்து பயந்து பயணிப்பவர்களுக்கு மாத்திரே இதன் பெறுமதி தெரியும். வேறு எவருக்கும் தெரியாது.

சமையல் எரிவாயு, எரிபொருள் கொண்டுவர பணம் இல்லாவிட்டால், பாலங்களை நிர்மாணிப்பதற்காக எவ்வாறு 10 இலட்சம் ரூபா நிதி செலவளிக்கிறார்கள் எனவும் வினவுபவர்கள் இருக்கிறார்கள். எரிபொருள், எரிவாயு என்பன டொலருக்கே இறக்குமதி செய்யப்படுகின்றன. ஜனாதிபதியின் சரியான கொள்கையும், திட்டமுமே இந்த அபிவிருத்தி பணிகளுக்கான பணம் கிடைத்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஊழலற்ற ஆட்சியொன்று முன்னெடுக்கப்படுவது இதற்கான காரணமாகும்.

சரியான வழிமுறைகளின் காரணமாகவே தேசிய பொருளாதாரத்துக்கு எந்த நெருக்கடியும் ஏற்படவில்லை. அவர்கள் இருந்திருந்தால் மக்கள் பசியிலேயே இருந்திருப்பார்கள். வரிசையில் காத்திருந்து உயிரிழப்பதற்கு பதிலாக பட்டினியால் மக்கள் உயிரிழந்திருப்பார்கள்.

தற்போது பிரச்சினை இருக்கிறது. இல்லை என்று கூறவில்லை. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் காரணமாக மக்கள் நெருக்கடியை சந்தித்துள்ளார்கள். அரசாங்கத்தை திட்டுகிறார்கள். எரிவாயு நெருக்கடியால் மக்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளார்கள். இந்த பிரச்சினைகள் நாட்டில் இல்லையென பொய் கூற முடியாது. ஆனால், இந்த சகல பிரச்சினைகளும் தற்காலிகமான பிரச்சினைகளாகும்.

இன்னும் ஒரு சில வாரங்களில் எரிவாயு மற்றும் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென உறுதியாக குறிப்பிடுகிறேன். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை குறித்து எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சிக்கல் நிலையை எதிர்கொள்ள முடியாத சில அமைச்சர்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை வீணடித்து வேறு தரப்பினருடன் இணைந்து அரசாங்கத்தை வீழ்த்த முயற்சிக்கிறார்கள். நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதும் பொறுப்பான அமைச்சரே 14 நாட்களுக்கே நாட்டில் தேவையான எரிபொருள் இருக்கிறது, இருக்கும் எரிபொருளை சேமித்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தால் யார் பயங்கொள்ளாமல் இருப்பார்கள். எரிவாயு இல்லை என்றதும் நிச்சயமாக மக்கள் பயங்கொள்வார்கள்.

100 ரூபா, 200 ரூபாவுக்கு எரிபொருள் பெற்றுக்கொண்டவர்கள் தற்போது வாகனங்கள் நிரம்ப எரிபொருள் கொள்வனவு செய்து கொள்கிறார்கள். அதுமாத்திரமின்றி, தனியாக பீப்பாய்களிலும் எரிபொருளை கொள்வனவு செய்கிறார்கள். இதுவே உண்மை நிலைமை.

இந்த பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். இது நாட்டை காட்டிக்கொடுக்கும் வகையிலான பிரச்சினை கிடையாது. அதனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நெருக்கடி நிலைமையிலும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசாங்கம் என்று வரலாற்றில் இடம் பிடிக்கும் என்பதை மறுக்க முடியாது.

காமினி திஸாநாயக்க, பிரேமதாச போன்றோர் மக்களின் இரத்தத்தை பார்த்தே ஆட்சி செய்தார்கள். அதுவே அவர்களின் ஆட்சி முறை. காட்டிக் கொடுப்பவர்களே இன்று தம்மால் மாத்திரமே நாட்டை ஆட்சி செய்ய முடியும் என்கிறார்கள்.

எது எவ்வாறாயினும், இந்த நெருக்கடி நிலைமையை நாங்கள் எதிர்கொள்வோம். ஜனநாயக ரீதியாக இந்த பிரச்சினைகளை எதிர்கொள்வோம். அவர்கள் இரத்தம் பார்க்க ஆசைப்பட்டாலும் அதற்கு நாங்கள் விருப்பம் இல்லை. மனிதாபிமானத்துடனே நாங்கள் ஆட்சி செய்கிறோம். ஆர்ப்பாட்டங்களுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை. நிச்சயமாக பொருளாதார ரீதியாக வலுவடையச் செய்து அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவோம் என்றார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிங்களவர் ஒருவர் கூட கைதாகவில்லை!

## ஹர்ஷ எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு



(நா. தினுஷா)

நாட்டில் இதுவரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு சிங்கள பிரஜை கூட கைது செய்யப்பட்டதில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் சிங்கள மக்களுக்கு தெரிவதுமில்லை. அதிலுள்ள பாரதூரங்களும் அவர்களுக்கு தெரிவதுமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று (22) சபையில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொ டர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக தமிழ் மக்களே அதிகம் பாதிப்படைகிறார்கள். இதுவரையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு சிங்கள பிரஜையாவது கைதுசெய்யப்பட்டுள்ளாரா? என்று கேள்வி எழுப்பினால் அவ்வாறு இல்லை என்றே குறிப்பிடவேண்டும்.

ஆயிரக்கணக்கானவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சடத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் ஒரு சிங்களவர் கூட கைதுசெய்யப்பட்டதில்லை என்றே கூறவேண்டும். சிங்கள மக்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்திலுள்ள பாரதூரம் தெரியவில்லை. சிங்கள மக்கள் இதுவொரு சாதாரண சட்டம் என்றே கருதுகிறார்கள். இதுதொடர்பில் சிங்கள மக்களுக்கு புரிவதும் இல்லை. தெரிவதுமில்லை.

# சர்வகட்சி மாநாட்டை டெலோவும் புறக்கணிப்பு!

சர்வகட்சி மாநாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் டெலோவும் புறக்கணிக்கின்றது என அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (22) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி மாநாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ புறக்கணிக்கின்றது.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனாதிபதிக்கிடையிலான சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் நல்லிணக்க சமிஞ்சையைக் காட்டும்படியான கோரிக்கையை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம். தற்போதும் அவ்வாறான நல்லிணக்க சமிஞ்சையைக் காட்டுகின்ற பட்சத்திலே மேற்கொண்டு சிந்திக்கலாம் என்றும் தெரிவித்திருக்கின்றோம்.

தற்போது சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருக்கின்ற இந்த தருணத்தில் நாங்கள் அதனையும் புறக்கணிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தின் போது அங்கிருக்கின்ற பொலிஸாரால் மிக மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தற்போது வடக்கு கிழக்கை நோக்கியே அமைச்சர்களின், அரச பிரதிநிதிகளின் பயணங்கள் இருக்கின்றன. காரணம் சிங்கள மக்கள் அவர்களைப் புறக்கணித்துள்ளார்கள்.

இத்தருணத்தில் தமிழ் மக்கள் மத்தியிலே வந்து தங்களுடைய கருத்துகளைச் சொல்லுகின்றபோது சிங்கள மக்கள் தங்களுக்குச் சார்பாக மாறுவார்கள் என்ற யுத்தியோடு தமிழ்ப் பிரதேசங்களிலே வந்து புத்த கோயில்களை அமைப்பதும், எமது மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவை நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் அடிப்படையாகப் பொருளாதார ரீதியிலே தன்னை ஒருபோதும் நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது.

வெளிநாடுகளில் இவ்வாறான நிலைமைகள், தேர்தல் தோல்விகள் என்பன ஏற்பட்டால் அதன் தலைவர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்து விடுவார்கள்.

இதேபோல் இன்றைக்கு மிகவும் மோசமான பின்னடைவைக் கண்டிருக்கின்ற இந்த நாட்டின் தலைவர்கள் இராஜினாமா செய்வதுதான் சாலச் சிறந்தது என்பதோடு தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ இந்த சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்கின்றது என்று தெரிவித்தார்.

# பயங்கரவாதத் தடை திருத்தச் சட்டம் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம் 51 மேலதிக வாக்குளால் நாடாளுமன்றத்தில் நேற்று (22) நிறைவேற்றப் பட்டது.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது.

அதன் பின்னர் நடந்த வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்தச் சட்டம் திருத்தங்களுடன் நிறைவேற்றப் பட்டது.






**சென்னை தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலகத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று (22) வக்ஃப் வாரியதலைவர் எம். அப்துல் ரஹ்மானை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். தலைவராக பொறுப்பேற்றதற்கு நன்றி தெரிவித்து சால்வை மற்றும் பூங்கொத்து வாழ்த்துகளை தெரிவித்தார். இதன்போது, திருச்சி மணிச்சுடர் ஊடகவியலாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது, தினேஷ், வாகீசன், செந்தில் பாலாஜி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.**

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்து போராட்டம்!

## சர்வதேசத்துக்கு சாணக்கியன் எம்.பி. விளக்கம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து போராட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் 144ஆவது அமர்வு இந்தோனேஷியாவின் பாலியில் இடம்பெற்று வருகின்றது.

குறித்த அமர்வானது நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில், நேற்று குறித்த அமர்வில் உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சர்வதேச சமூகத்திற்கு இதுதொடர்பாக தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன், அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவும் நேற்று உரையாற்றியிருந்தார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் காணப்படும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க சர்வதேச நாடாளுமன்ற சங்கத்துடன், மனித உரிமைகளை மதிக்கும் நாடுகள் கைகோர்க்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திலுள்ள 178 நாடுகளும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் ஜனநாயகத்தினை நிலை நிறுத்துவதற்கும், மனித உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும் இதை கூடுதலாக முயற்சி எடுக்க வேண்டும் என இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் கடந்த வருடங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மற்றும் இஸ்லாமிய மக்களின் ஜனாசா எரிப்பு விடயம் தொடர்பாகவும் இரா.சாணக்கியன் நேற்று உரையாற்றியிருந்தார்.

**கொள்ளுப்பிட்டிய கிளை**
**“புதிய இடத்திற்கு”**

**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**

**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன், 2022 மார்ச் 23ஆம் திகதி இன்று தொடக்கம் அதிக இடவசதியுடைய புதிய இடத்திற்கு நகர்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**எமது புதிய முகவரி**
**இல.45/A, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.**

**தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி,**
**முகாமைத்துவம்,**
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**கொள்ளுப்பிட்டிய கிளை - தொலைபேசி : 0112 130 000**

COMMERCIAL CREDIT

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்காக சகல கட்சிகளிடமிருந்தும் கிடைக்கும் யோசனைகள் குறித்தும், தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஆராய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை அரசின் பங்காளிகள் உட்பட பிரதான எதிர்க்கட்சிகளும் புறக்கணித்துள்ளன.

ஜனாதிபதி தலைமையில் இன்று (23) நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டிற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், பல கட்சிகள் அதனைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

அதன்படி, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சியாகவுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், விமல் மற்றும் உதய கம்மன்பில தரப்பிலுள்ள 10 பங்காளிகளில் 8 கட்சிகள் புறக்கணித்துள்ளன. அத்தோடு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் புறக்கணித்துள்ளதாக அக்கட்சி ஜனாதிபதி செயலாளருக்கு கடிதம் மூலம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதியினால் உரிய நேரத்தில் உரிய தீர்மானங்கள் எடுக்கப்படாதமை, முறையற்ற நிதிக் கொள்கைகள், பொருத்தமற்ற நிர்வாகக் கட்டமைப்பு போன்ற செயற்பாடுகளே இன்றைய நிலைமைக்குக் காரணமாகியுள்ளன.

அரசாங்கத்திலுள்ளவர்களே அரசாங்கத்தின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்து வருகின்றனர். எனவே, தற்போதைய நெருக்கடிகளுக்கு சர்வகட்சி மாநாட்டினால் தீர்வு காண முடியாது என நினைக்கின்றோம்.

மக்களுக்காக அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு எதிர்க்கட்சி எவ்வித நிபந்தனையுமின்றி ஆதரவு வழங்கும். ஆனால், தனிப்பட்ட இலாபத்துக்காக முன்னெடுக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் எதிர்க்கட்சி ஆதரவளிக்காது. எனவே, ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் சர்வகட்சி மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி கலந்துகொள்ளாது என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சிகளும் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பதற்குத் தீர்மானித்துள்ளன. எனினும், 10 கட்சிகள் சார்பாகவும் இருவரைக் குறித்த மாநாட்டிற்கு அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளன. அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்தன தேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதேபோன்று, ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 23ஆம் திகதி, புதன்கிழமை

# சர்வகட்சிக் கூட்டமும் நேர விரயமும்!

இந்த சர்வகட்சி மாநாடானது, பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கானதல்ல. மாறாக, அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினை தீர்ப்பதற்கானது என அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்த இரு அமைச்சர்கள் நீக்கப்பட்டதை தொடர்ந்து அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக ஜனாதிபதிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விளைவாக சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதால் எவ்வித பயனுமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதாக ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரத்துறையில் மட்டுமல்லாது, பொருளாதார வீழ்ச்சியின் தொடர்ச்சியாக நம் நாடு அரசியல், சமூக, கலாசார துறைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் அதல பாதாளத்தில் விழுந்துள்ள பின்னணியில், சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை கவனமாகப் பரிசீலித்து, இம்மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளதாக கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தோல்வியை எதிரணியின் தலைகளில் சுமத்துவதற்கான முயற்சியாகவும், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை திருப்திப்படுத்த அரசாங்கம் செய்யும் முயற்சியாகவும் பார்க்கின்றோம் என்றும் குறிப்பிட்டுள்ளார் மனோ. எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துகளை வெளியிட தமது கட்சி தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் பங்காளியான ரெலோ இன்றைய கூட்டத்தில் பங்கேற்காதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்துக் கட்சிகளையும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய சர்வகட்சிக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் வேண்டுகோளுக்கிணங்கவே நடப்பதாக செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், கொரோனா தொற்று பரவ ஆரம்பித்த காலத்தில், இப்படியான கூட்டமொன்றைக் கூட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் கூறியிருந்தமையும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

இன்றைய கூட்டத்தில் பெரும்பாலான கட்சிகள் பங்கேற்கவில்லை. அதனால் இது முழுமையான சர்வகட்சிக் கூட்டமாக இருக்காது. அதேசமயம் இப்படியான கூட்டங்களை வைத்து பேசுவதன் மூலமோ அல்லது அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பேசுவதன் மூலமோ பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வைக் காணமுடியாது. வெள்ளமொன்று வரப்போவதை தெரிந்துகொண்டு வாளாவிருந்த ஆட்சியாளர்கள், இப்போது அந்த காட்டாற்று வெள்ளம் கழுத்துவரை வந்த பின்னர் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்ள அரசியல் ஆலோசனைகளை பின்பற்ற முயல்வது உசிதமானதல்ல.

அரசாங்கம் ஏற்கனவே பொருளாதார ஆலோசனை சபையை நிறுவியுள்ளது. அதில் பிரபல தொழிலதிபர்களும், பொருளாதார நிபுணர்களும் அடங்குகின்றனர். அந்த சபையின் ஆலோசனைகள், பரிந்துரைகள் குறித்து உடனடி கவனம் செலுத்தப்படவேண்டும். பொருளாதார முகாமைத்துவம் உடனடியாக செய்யப்பட வேண்டும். அதைவிடுத்து சர்வகட்சிக் கூட்டம் என்ற வகையில் அரசியல் நிகழ்வுகளை நடத்துவது வெறுமனே நேரத்தை செலவளிக்கும் வேலையே தவிர வேறொன்றுமில்லை.

# பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி மாநாடு மீட்சியாக அமையுமா?

**எம்.எஸ். அமீர் ஹுசைன்**

தற்போது மக்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி அளிப்பதற்காக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி நிலைமைகளை ஆராய வேண்டும் என்றும், நெருக்கடியைத் தீர்ப்பதற்காக என்ன வழிகளில் தீர்வுகளைத் தேட முடியும் என்று ஆலோசிப்பதற்காக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்ட வேண்டும் என்றும் ஸ்ரீல.சு.கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன அண்மையில் ஜனாதிபதியை சந்தித்தபோது வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி இரண்டு கருத்து இல்லாமல் அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் 2022 மார்ச் 23 ஆம் திகதி (இன்று) புதன்கிழமை சர்வகட்சி மாநாட்டிற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

இந்த சர்வகட்சி மாநாட்டில் பங்கெடுத்து பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஆலோசனைகளை முன்வைக்குமாறும், தீர்வுகள் இருக்கின்றன என்று கூறிக்கொண்டு அவற்றை பதுக்கி வைத்திருப்பதில் பலன் இல்லை என்றும், அனைத்துக் கட்சிகளும் சர்வகட்சி மாநாட்டிற்கு வர வேண்டும் என்றும் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மைத்ரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

ஆளும் கட்சிக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டு சில அமைச்சுப் பதவிகளை அனுபவித்து வரும் ஸ்ரீல.சு.கட்சி, அதன் தலைவரான மைத்ரிபால சிறிசேனவை இந்த அரசாங்கம் புறக்கணித்து ஓரம் கட்டிய நிலையில் உறவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில், ஏற்கனவே 14 இலட்சம் வாக்குபலத்துடன் இருக்கும் ஸ்ரீல.சு.கட்சி தேசிய ரீதியில் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வருகின்ற நிலையில், தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு எதையாவது செய்ததாக அறிவிக்க வேண்டும் என்ற நிலையில் மைத்ரிபால சிறிசேன இந்த சர்வகட்சி மாநாட்டை ஒரு மாபெரும் வரப்பிரசாதமாகக் கருதி வருகின்றார்.

ஆனாலும், ஏற்கனவே அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்திற்கு அனுசரணையாக இருந்து வரும் உதய கம்மன்பில, விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஏற்கனவே அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டதால் இப்போது ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சித்து வருகின்ற நிலையில், இந்த சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்துள்ளனர். அத்துடன் வெளிநாட்டுப் பிரஜையான நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்றும் மேடைகளில் வீர முழக்கம் போட்டு வருகின்றனர்.

அவ்வாறே அநுரகுமார திசாநாயக்காவின் தேசிய மக்கள் சக்தி, பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜீவன் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பல கட்சிகள் இந்த சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரிக்கத் திட்டமிட்டுள்ளன. பொருளாதார மீட்சிக்கான உறுதியான மாற்றுத் திட்டங்களின் அவசியமே இன்றைய தேவையாக இருப்பதால், சர்வகட்சி மாநாட்டால் தீர்வு காண முடியாது என்பது இவர்களது கருத்தாகும். நிலைமை இவ்வாறிருக்க இலங்கையின் அரசியல் வரலாற்றில் எப்போதாவது இதுபோன்ற சந்தர்ப்பங்கள், நிலைமைகள் உருவாகி இருக்கின்றனவா என்பது தொடர்பாக சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், இன்றைய சந்ததியினர் அறியாத ஒரு யுகத்தைக் கடந்தே நாடு பொருளாதார மீட்சி என்ற பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது என்பதை அறிய முடிகின்றது.

இலங்கையின் வரலாற்றில் 1970 – 1977 வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி நிலவிய காலப்பகுதியில் மக்கள் எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியின் பின்னர், மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இப்போது எதிர்நோக்கி வருகின்றனர். அன்றைய பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி செய்த காலகட்டத்தில் உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அறிமுகம் செய்த சில திட்டங்கள் காரணமாக மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, நோய்களுக்கு மருந்து நிவாரணங்கள் இன்றி சொல்லொணா துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தனர்.

அதே யுகம்தான் மீண்டும் 45 வருடங்களின் பின்னர் இப்போது மலர்ந்திருக்கின்றது. இப்போதும் மக்கள் உண்ண உணவின்றியும், வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாகவும் கிடைக்கின்ற வருமானத்தில் வாழ முடியாமலும் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்க யுகத்தில் ஒரு இறாத்தல் பாண் வாங்க வேண்டுமானால், அதிகாலை 4.00 மணிக்கு ஊரிலுள்ள கூட்டுறவுக் கடைக்கு பங்கீட்டு அட்டையுடன் போய் நீண்ட வரிசையில் நின்றால்தான் காலை 7.00 மணிக்கு பாண் கிடைக்கும் நிலை இருந்தது. பெண்களுக்கான சாரி (பட்டர் நைலோன் வெள்ளை நிற துணி) மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பங்கீட்டு அட்டைக்கு கூட்டுறவுக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. அந்தத் துணியை வாங்கி அதற்கு வர்ண சாயம் போட்டு சுடுநீரில் அவித்து வர்ண நிற சாரியாக அணியும் நிலை இருந்தது. இதுபோன்று பலவிதமான கஷ்டங்களை மக்கள் அனுபவித்தனர்.

இரண்டு கொத்து (அன்றை காலகட்டத்தில் கிலோ அளவீடு இல்லை) அரிசியைத் தவிர மேலதிகமாக அரிசியை யாராவது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் சென்றால் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும் யுகம் அதுவாக இருந்தது. ஹோட்டல்களில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மாத்திரமே சோறு விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மக்களின் பிரதான ஆகாரமாக இருந்து வந்தது மரவள்ளிக் கிழங்காகும். குழந்தைகள் போஷாக்கின்மை காரணமாக பல்வேறு நோய்களுக்கு ஆளாகி பட்டினிச் சாவை எதிர்நோக்கினார்கள்.

இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க பிரதமர் சிறிமாவோ அம்மையார் எடுத்த நடவடிக்கை காரணமாக உள்நாட்டின் தேவைக்கேற்ப உற்பத்தி இல்லாததால் நாடு பஞ்சத்தை எதிர்நோக்கியது. அன்றைய யுகத்தோடு இன்றைய யுகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இன்று பொருட்கள் இருந்தாலும் அவற்றை வாங்கப் பணம் இல்லை. நாட்கணக்கில் எரிபொருளுக்காக வரிசையில் நிற்கும் நிலை. டீசல் பற்றாக்குறை காரணமாக தொடர் மின்வெட்டால் பாதிப்பு. அத்துடன் இப்போதைய நிலையில் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்த வண்ணம் உள்ளன. மறுபுறமாக 2020 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்டுள்ள கொரொனா தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி தொடர்ச்சியாக அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதால் தற்போது 45 வருடங்களுக்கு முன்னர் என்ன கஷ்டங்களையும், துன்பங்களையும் மக்கள் எதிர்நோக்கினார்களோ, அதே துன்பங்களை தற்போதும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

கொரொனா தொற்றுப் பரவலின் பின்னர் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம், உட்பட தெற்காசிய நாடுகள் பல அதிலிருந்து மீண்டு, தமது பொருளாதாரத்தை மீண்டும் வளப்படுத்தி, அபிவிருத்தியை நோக்கி இட்டுச் சென்று கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கையில் 1970 ஆம் ஆண்டு யுகத்தை விட மிக மோசமான பட்டினிச் சாவு நிலை உருவாகி இருக்கின்றது.

எரிவாயு, எரிபொருளுக்காக மக்கள் பல நாட்களாக வரிசையில் நிற்க வேண்டிய நிலை. இலங்கை மத்திய வங்கியிடம் இருக்க வேண்டிய சிறப்பு எடுப்பு வீழ்ச்சி கண்டுவிட்டதால் நாட்டில் அமெரிக்க டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் இறக்குமதிகள் இல்லை. பால்மா, சீமெந்து, மருந்து வகைகள் உட்பட இறக்குமதியாகும் பொருட்கள் இல்லை. அதனால் உள்நாட்டு சந்தையில் அத்தியாவசிய பொருட்கள் பலவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் என்ற ஒன்று நடைமுறையில் இருந்தாலும், அதனால் பாவனையாளர்களைப் பாதுகாக்க முடியாத அளவிற்கு பொருட்களுக்கு தட்டுப்பாடும், விநியோகத்தில் கட்டுப்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. பாடசாலைகளில் நடைபெற்றுக்கொண்டிருந்த பரீட்சைகளுக்கு போதுமான பரீட்சை வினாத்தாள்களை அச்சிட காகிதம் இல்லாததால் பரீட்சைகளைக் கூட பிற்போட வேண்டிய அளவிற்கு உள்நாட்டில் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலை ஏற்பட யார் காரணம் என்பதே இன்றுள்ள பிரதான கேள்வியாகும். ஒருபுறம் நிதி அமைச்சர் என்றும், ஜனாதிபதி உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கமுமே பொறுப்பு என்றும் மக்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். அதனால் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் நாடளாவிய ரீதியில் பரவலாக இடம்பெற்று வருவதைக் காணலாம்.

அதேநேரம் இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ராலும் பொறுப்புக் கூற வேண்டியவராக உள்ளார். நாட்டின் பொருளாதாரத்தின் போக்குகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும், எதிர்வு கூறல்களையும் வழங்க வேண்டிய இலங்கை மத்திய வங்கி முழுமையாக அரசியல் மயப்படுத்தலுக்கு உட்பட்டுவிட்டதோ என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. நாட்டில் இன்றைய நிலையில் பண வீக்கம் 17.5 வீதத்தையும் கடந்து விட்டதாக பொருளாதார குறிகாட்டிகள் கூறுகின்றன. இந்த நிலை ஏற்படக் காரணம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தூர நோக்கம் இல்லாமல் பில்லியன் கணக்கிலான நாணயத்தை அச்சிட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர்கள் நாட்டின் பொருளாதாரம் இந்தளவிற்கு பாதாளத்தில் விழும் அளவிற்கு வரும் வரையில் என்ன செய்தார்கள், ஜனாதிபதிக்கு நாட்டின் பொருளாதார எதிர்வு கூறலை சரியான முறையில் இவர்கள் தெரிவிக்கவில்லையா போன்ற கேள்விகளும் எழுந்துள்ளன. அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 14 அங்கத்தவர்களைக் கொண்ட வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் அடங்கிய தேசிய பொருளாதாரக் குழு முக்கியமான 05 யோசனைகளை முன்வைத்திருக்கின்றது. அதில் பிரதானமாக நிதி அமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழாமை நியமித்தல், நிதி தொடர்பான ஆலோசனை சபையை நிறுவுதல் உட்பட பல விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றது.

06 பக்கம் பார்க்க...

## தவக்கால சிந்தனை



### கடைப்பிடித்துக் கற்பிக்கிறவர்!

இறையாட்சியின் செய்திகளை அறிவிக்கிறவர்களாக வாழவே இயேசு சீடர்களைத் தேர்ந்துகொண்டார். அச்சீடர்களை இரு பிரிவினராகப் பிரிக்கிறார் இயேசு. அவரது கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி, அவ்வாறே பிறருக்கும் கற்பிக்கிறவர்கள் விண்ணரசில் சிறியவர் என அழைக்கப்படுவர். ஆனால், அக்கட்டளைகளைக் கடைப்பிடித்து, அப்படியே பிறருக்கும் கற்பிக்கிறவர் பெரியவர் எனப்படுவர். இன்றைய திருச்சபையில் நாம் சிறியோர் பலரைப் பார்க்கிறோம். ஆனால், கடைப்பிடித்துக் கற்பிக்கும் பெரியோரைக் காண்பது அரிதாகவே உள்ளது. இறைவனின் கட்டளைகளை முழு மனதோடு கடைப்பிடிப்பது என்பது மிகப் பெரிய சவால். அதற்கு இறையாசி தேவை. கடைப்பிடிப்பதைப் பிறருக்கு அறிவிப்பதே நற்செய்தி அறிவிப்புப் பணி. அப்பணியில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோமாக.

## நக்கல் நமசிவாயம்

***சிலிண்டர்கள், பெற்றோல், டீசல் பால்மா... எல்லாம் இனிமேல் சீதனப் பட்டியலுக்குள்ள வந்தாலும் வருமுங்கோ..!***




## இன்றைய நாளில்...

- 1857 – எலிசா ஒட்டிஸ் முதலாவது பயணிகளுக்கான மின் உயர்த்தியை நியூயோர்க் நகரில் அமைத்தார்.
- 1919 – இத்தாலியின் மிலன் நகரில் பெனிட்டோ முசோலினி தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1931 – இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், சிவராம் ராஜகுரு, சுக்தேவ் தபார் ஆகியோர் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கொலைசெய்த குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டனர்.
- 1965 – நாசாவின் முதலாவது இரு விண்வெளி வீரர்களைக் கொண்ட ஜெமினி-3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1998 – டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை வென்றது.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 10 21 11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
அரசாங்க தகவல் திணைக்களம்

### 01. முதலீட்டு ஊக்குவிப்புகள் தொடர்பான அமைச்சரவைக் குழுவொன்றை நியமித்தல்

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக தேசிய ரீதியாக முன்னுரிமையளிக்கப்படும் துறைகளை அடையாளங்கண்டு, அதற்கு ஏற்புடைய துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளை இனங்கண்டு ஊக்குவிப்பதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும், நடைமுறை சாத்திய மானதுமான தீர்வுகளை வழங்குமுகமாக ஜனாதிபதியின் தலைமையில், பிரதமர் உள்ளிட்ட ஏற்புடைய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுடன் கூடிய முதலீட்டு ஊக்குவிப்புகள் தொடர்பான அமைச்சரவைக் குழுவை நியமிப்பதற்காகவும், குறித்த அமைச்சரவைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் குறித்த அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய அலுவலர்களுடன் கூடிய உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. புத்தாக்க முறைமையை பலப்படுத்தல்

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் 2018ஆம் ஆண்டில் தெற்காசியாவில் முன்னணி சமூக ஆராய்ச்சி நிறுவனமான சிற்ரா (Citra) நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. சிற்ரா (Citra) புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனம் கடந்த காலங்களில் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் பங்காளர்களின் ஒத்துழைப்புடன் செயலாற்றி, குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய, கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பங்களிப்புடன் சிற்ரா (Citra) புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, சிற்ரா புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனம் (Citra) உலகில் ஏனைய நாடுகளைப் போலவே பிரதமர் அலுவலகத்தின் நேரடி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கருத்திட்டமாக தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்கும், அதற்காக பிரதமரின் செயலாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியின் இயக்கத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்ட நிர்வாக இயக்கச் சபையொன்றை உருவாக்குவதற்காகவும் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. உள்ளடக்கப் பொருளாதார விருத்திக்கான திறன்கள் (Skills for Inclusive Growth – S4IG) கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கமும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து முன்மொழிந்துள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் 2017ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய எமது நாட்டில் சுற்றுலாத்துறையின் பெறுமதி சேர்க்கைகளை மேம்படுத்துவதற்காகவும், சுற்றுலாத்துறையில் தொழில் முயற்சிகளை அதிகரிப்பதையும் நோக்காகக்கொண்டு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி அனுசரணையின் உள்ளடக்கப் பொருளாதார விருத்திக்கான திறன்கள் ( Skills for Inclusive Growth – S4IG) கருத்திட்டம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் 04 வருடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதன் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 12 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. கருத்திட்டத்தின் முதலாம் கட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 மாவட்டங்களுக்கு மேலதிகமாக அநுராதபுரம் மற்றும் மாத்தளை போன்ற மாவட்டங்களையும் இரண்டாம் கட்டத்தில் இணைத்துக்கொண்டு குறித்த கருத்திட்டத்தை 2024ஆம் ஆண்டு வரைக்கும் நடைமுறைப்படுத்துவதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. விவசாய இயந்திரவியல் விஞ்ஞானம் பற்றிய சீன அகடமி (China Academy of Agriculture Mechanization Science – CAAMS) மற்றும் விவசாய திணைக்களத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல்

விவசாய இயந்திரவியல் துறையில் ஒத்துழைப்புகள் தொடர்பாக விவசாய இயந்திரவியல் விஞ்ஞானம் பற்றிய சீன அகடமி (China Academy of Agriculture Mechanization Science – CAAMS ) மற்றும் விவசாயத் திணைக்களத்திற்கும் இடையில் 2017ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலம் தற்போது முடிவடைந்துள்ளமையால், இருதரப்புக்கும் இடையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் விவசாய இயந்திரோபகரணங்கள் தொடர்பான மாதிரிக் கிராமங்களை உருவாக்கல், விவசாய இயந்திரோபகரணங்கள் தொடர்பான விசேட நிபுணத்துவங்களை பரிமாற்றிக் கொள்ளல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், விவசாய இயந்திரோபகரணங்கள் பற்றிய மாதிரி நிலையங்களை அமைத்தல் மற்றும் விவசாய இயந்திரவியல் தொடர்பான கூட்டு ஆராய்ச்சிகளை நடத்துதல் போன்ற துறைகள் தொடர்பாக ஒத்துழைப்புகளுடன் செயற்படுவதற்கு இருதரப்பும் எதிர்பார்த்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இருதரப்புகளும் கையொப்பமிடுவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தம்

இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்ப மிடுவதற்காக 2019 ஜூலை மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், குறித்த ஒப்பந்தம் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. அதனால் விமான சேவை நடவடிக்கைகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் குறித்த விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு மற்றும் இத்தாலி குடியரசுக்கும் இடையிலான தண்டனைகள் விதிக்கப்பட்ட குற்றவாளிகளை ஒப்படைத்தலுக்கான ஒப்பந்தம்

இலங்கை நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டுள்ள திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்டுள்ள வேற்று நாட்டு பிரஜை ஒருவர் குறித்த தண்டனையை அந்நபர் தனது பிரஜாவுரிமை கொண்ட நாட்டில் அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் குறித்த நாட்டிடம் ஒப்படைப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் 1995ஆம் ஆண்டு 05ஆம் இலக்க குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதேபோல் வேற்று நாடுகளில் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவரை எமது நாட்டுக்கு ஒப்படைக்கும் சட்ட ஏற்பாடுகளும் குறித்த சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. அதற்கமைய செயலாற்றுவதற்காக இருதரப்புக்கும் இடையில் குற்றவாளிகளை பரிமாற்றிக்கொள்வதற்கான இலங்கை மற்றும் குறித்த நாட்டுடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருத்தல் அவசியமாகும். அதற்கமைய இலங்கை அரசுக்கும் இத்தாலி அரசுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிப்பத்திர வாடகை வீட்டுத்திட்ட முறையொன்றை நடைமுறைப்படுத்தல்

காணி மற்றும் வீடுகள் இன்மையால் குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற வாடகைக் குடியிருப்பாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் உறுதிப்பத்திர வாடகை வீடு எனும் பெயரில் முன்மொழிவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கிராமிய வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழிற்றுறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் 04 மாடிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கும், முதலாம் கட்டத்தின் கீழ் மாகாண மட்டத்தில் 464 வீடுகளுடன் கூடிய 09 வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு ஆரம்பக் கொடுப்பனவை செலுத்துவதற்கான இயலுமை இன்மையால் மாதாந்தம் 15,000 ரூபா வாடகைப் பணமாக 31 வருடங்களுக்கு அறவிடுவதற்கும் இரண்டாவது அல்லது மூன்றாவது பரம்பரைக்கு வீட்டு உரிமையை ஒப்படைக்கக்கூடிய வகையிலும், எந்தவொரு காரணத்திற்காகவும் வீட்டை விற்பனை செய்வதற்கு இயலாத வகையிலும் பயனாளிகளுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 2022ஆம் ஆண்டுக்கான அரச மருத்துமனைகள் உள்ளிட்ட ஏனைய சுகாதார நிறுவனங்களுக்குத் தேவையான சத்திரசிகிச்சை தொற்றுநீக்கித் துணி ( Surgical Gauze ) கொள்வனவு செய்வதற்கான பெறுகையை வழங்கல்

அரச மருத்துவமனைகளில் சிகிச்சைகள் மற்றும் சத்திரசிகிச்சைகளுக்குத் தேவையான அறுவைத் தொற்றுநீக்கியான சத்திரசிகிச்சைத் துணி (Surgical Gauze) ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக கொள்வனவு செய்யவேண்டியது அத்தியாவசியமானதாகும். அதற்கமைய மருத்துவ விநியோகப் பிரிவுக்கு 2022ஆம் ஆண்டுக்கான சத்திரசிகிச்சை தொற்றுநீக்கித் துணி 30 மில்லியன் மீற்றர்கள் தேவைப்படுகின்றமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மீற்றர் 30.55 ரூபா வீதம் பதிவு செய்யப்பட்ட 407 விநியோகத்தர்களிடம் குறித்த சத்திரசிகிச்சை தொற்றுநீக்கித் துணியைக் கொள்வனவுசெய்வதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு பரிந்துரைத் துள்ளது. குறித்த பரிந்துரைகளுக்கமைய குறித்த விநியோகத்தர்களுக்கு பெறுகையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

தொழில் வழங்குநரால் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை மீறல் மற்றும் ஊழியர்களுக்கு உரித்தான நியதிச்சட்ட உரித்துகளை அறவிட்டு வழங்கல் போன்ற குறுகிய காலத்தில் தீர்வு காணக்கூடிய வழக்குகள் அதிகமாக நீதவான் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன. அதுதொடர்பான தீர்ப்புகளை வழங்குவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமை தெரியவந்துள்ளது. குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கும், தொழில் நியாய சபைக்கும் சமமான நீதிமன்ற அதிகாரம் கிடைக்கும் வகையில் கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

அபாயகர விலங்குகள் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்ட வரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. அதற்கமைய, அபாயகர விலங்குகள் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. இறுதி விருப்பு ஆவணக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

இறுதி விருப்பு ஆவணக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 12. திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

வெளிநாட்டு விவாகரத்து பதிவுசெய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அதற்கமைய சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் திருமணத்தைப் பதிவுசெய்வதற்காக பூர்த்தி செய்யவேண்டிய நிபந்தனைகள் உள்வாங்கப்பட வேண்டியதுடன், வெளிநாட்டு விவாகரத்து பதிவுசெய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலுக்கான ஏற்பாடுகள் குறித்த கட்டளைச் சட்டத்தில் உள்வாங்கப்படாமையால் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும் அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 13. இரத்துச்செய்ய இயலாத கொடை வழங்கல் காணிப் பத்திரங்கள் மோசமான நன்றி கெடுதலின் பிரகாரம் இரத்துச்செய்தல் சட்டத்திருத்தம் செய்தல்

இரத்துச்செய்ய இயலாதவாறான தமது சொத்துகளை கொடையாக வழங்கும் காணி வழங்குநர்களால் தமது சொத்துகளில் வழங்கும் கொடைகளைப் பெறுநர்கள் இருக்கும்போது மற்றும் கொடையைப் பெறுபவர்கள் மோசடியாக குறித்த சொத்துகளை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றி வழங்கும்போது, அதற்கான சட்ட உதவிகளுக்கான ஏற்பாடுகளை உள்வாங்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்காக தேவையான ஏற்பாடுகளை வகுத்து 2017ஆம் ஆண்டு 05ஆம் இலக்க இரத்துச்செய்ய இயலாத கொடை வழங்கல் காணிப்பத்திரங்கள் மோசமான நன்றி கெடுதலின் பிரகாரம் இரத்துச்செய்தல் சட்டத்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 14. சமுத்திர மீட்புப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு நிலையத்தை நிறுவுதல்

இலங்கையில் சமுத்திர மீட்புப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பு நிலையத்தை நிறுவுவதற்காக 06 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய குறித்த உதவித்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசுக்கும் மற்றும் இந்திய அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் குறித்த நிலையத்தை நிறுவுவது தொடர்பான இலங்கை அரசுக்கும் இந்தியாவின் பாரத் இலக்ரோனிக்ஸ் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 15. இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவ சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசின் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவ சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசு 300 மில்லியன் இந்திய ரூபாவை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 16. இலங்கை மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்திசெய்வதற்காக இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

பரஸ்பர உடன்பாடுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்திசெய்வதற்கான ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, பருத்தித்துறை, பேசாலை, குருநகர், பலப்பிட்டிய மற்றும் ஏனைய பரஸ்பர உடன்பாடுகள் எட்டப்படும் இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்திசெய்வதற்காக இந்திய அரசின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# அமைச்சுப் பதவிக்காக பேரம்பேசும் ஆளுந்தரப்பே மலையகத்தில் உள்ளது

## இ.தொ.காவை சாடுகிறார் வேலுகுமார் எம்.பி.



மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சுப் பதவிக்காக பேரம்பேசும் ஆளுந்தரப்பே இன்று மலையகத்தில் உள்ளது - என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிதிச் செயலாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் நீண்ட வரிசையில் பொருட்களுக்காக நிற்கும் நிலைமையும் விலைகள் தொடர்பாக எந்தவித கட்டுப்பாடும் அற்ற நிலைமையும் தொடர்ந்து வருகின்றது. வியாபாரிகள் நிர்ணயிப்பதே பொருட்களுக்கான விலை என்ற நிலைமையும் இன்று தோன்றியுள்ளது. மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக முன்னிற்கவேண்டியவர்கள், மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சுப் பதவிக்காக பேரம்பேசுபவர்களாகவே உள்ளனர்.

இன்றைய அரசாங்கத்தின் ஆரம்பம் முதல் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிக்கு மேல் அடி விழுந்து வருகின்றது. தோட்ட நிர்வாகங்களின் அதிகாரத் துஷ்பிரயோகம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. தேவையான நாட்கள் வேலை வழங்குவதில்லை. திட்டமிட்டு வேலை நாட்களை குறைப்பது, வேலை செய்ய வேண்டிய அளவை அதிகரிப்பது என்பன வழமையான பிரச்சினையாக மாறியுள்ளது. ஆயிரம் ரூபா என்பது ஒருநாளுக்கான தீர்வு அல்ல. வருமானம் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றது. இச்சூழலில் மக்கள் ஒருவேளை உணவையாவது உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று மலையகத்தில் மக்கள் நாளாந்தம் அதிகம் பயன்படுத்தும் கோதுமை மாவிற்கும், மண்ணெண்ணெய்க்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. பொருட்கள் வாங்க வரிசைக்குப் போவதா இல்லை, தொழிலுக்குப் போவதா என திண்டாடும் நிலைக்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமைக்கு ஆளுந்தரப்பில் இருந்தால்தான் அனைத்தையும் சாதிக்கலாம் எனக் கூறி, எமது மக்களின் வாக்குகளை பெற்றவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆனால், மக்களின் இந்நிலைமை தொடர்பாக எந்தவித அக்கறையும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எமது மக்களின் பிரச்சினைகளைக் கூறி, பேரம்பேசி, மக்களை காப்பாற்றவேண்டியவர்கள், இன்று மக்களை நடுவீதியில் விட்டுவிட்டு அமைச்சுப் பதவிக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் நிலையையும் காண முடிகின்றது. மக்கள் இந்த அரசாங்கத்தையே விரட்டி அடிக்க பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில், மக்களை மறந்து அமைச்சுப் பதவிக்காக அலைபவர்களுக்கு மக்கள் விரைவிலேயே பதில் கொடுப்பார்கள்.



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் கல்வி வலய ரொசல்ல கணேஷா வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் பி.லோகிதன் (171), ஆர்.விதுன்ஷன் (163), எஸ்.திவாகர் (156) ஆகியோர் மேற்படி புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்கள், வழிகாட்டிய ஆசிரியை திருமதி எஸ்.பிரஷாந்தினி ஆகியோருக்கு பாடசாலை அதிபர் கே.அன்பழகன் மற்றும் பாடசாலை சமூகம் பாராட்டுகளை தெரிவிக்கின்றது.

# அபிவிருத்தித் திட்டங்களை கையளிக்கும் நிகழ்வு ஆளுநர் முஸம்மில் தலைமையில்







நூறு நகரங்களை அபிவிருத்திசெய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், ஹாலிஎல ஸ்பிரிங்வெளி நகரில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்றது.

சிறிய நகரங்களை அபிவிருத்திசெய்யும் நூறு நகரங்கள் வேலைத்திட்டத்தின்கீழ் 14.4 மில்லியன் ரூபா செலவில் குறித்த நகரம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. சூரியசக்தியுடன் கூடிய வீதி மின்விளக்குகள், பஸ் தரிப்பிடம், வாடகை வாகனங்களுக்கான தரிப்பிட வசதி உள்ளிட்ட சுகாதார வசதிகள் இதனூடாக அமைக்கப் பட்டுள்ளன. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, ஹாலிஎல பிரதேச சபைத் தலைவர் நிமல் சேனாநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்





(நடராஜா மலர்வேந்தன்)

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்துகொள்வதற்கான மக்கள் சந்திப்பொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் மற்றும் பிரதமரின் பெருந்தோட்டப் பகுதிக்கான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

பதுளை மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று (22) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பதுளை மாவட்ட இ.தொ.கா. பிரதிநிதிகள், தோட்டத் தலைவர்கள் மற்றும் தோட்டக் கமிட்டி தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மலையக மக்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தேயிலைத் தோட்டங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பதற்காக உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதோடு பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியாக முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் இதன்போது தெரிவித்தார்.







அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தின் 75ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்று(22) இடம்பெற்றது. இதன்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்ட இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பேராதனை வைத்தியசாலை சிறுவர் பிரிவு வைத்தியர் எம்.ஏ.எம்.பைஸல் கலந்துகொண்டார். (கண்டி நிருபர்)





2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட நானுஓயா நாவலர் ஆரம்ப கல்லூரியிலிருந்து தோற்றியவர்களில் பி.ஹர்சிதா(165), ஆர்.கௌசிக்நாத்(158), ஜே.மித்தீஸ்(156), எம்.மதுஷான்(149), ஆர்.கனிஷா(146) ஆகியோர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக கல்லூரியின் அதிபர் கே.சதாசிவம் தெரிவித்தார்.

சித்தியடைந்த மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களான ஆர்.அஜித்சிங், எஸ்.பழனிவேல், டி.நளினி ஆகியோருக்கும் 100இற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கும் அதிபர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். (தலவாக்கலை நிருபர்)

# பேக்கரி உடைத்து பாண், பணம் திருட்டு

(டி.சந்ரு, செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்ட பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாகவுள்ள பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பேக்கரியின் பின் பகுதியிலுள்ள ஜன்னலை உடைத்து மர்மநபர்கள் உள்ளே புகுந்துள்ளனர். அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாண், பேக்கரி உற்பத்திப் பொருட்கள் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளதாக நுவரெலியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் கடந்த மாதங்களில் தொடர்ந்து இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் பதிவாகியவண்ணம் உள்ளன. ஆனால், இதுவரை சந்தேகத்தின்பேரில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நச்சுத்தன்மையற்ற உணவகம் திறந்துவைப்பு





(இரத்தினபுரி நிருபர்)

கலிகமுவ பிரதேச சபையின் மூலம் 25 இலட்சம் ரூபா செலவில் அவிசாவளை - கேகாலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நச்சுத்தன்மையற்ற உணவகம் ஒன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (21) திறந்துவைக்கப்பட்ட மேற்படி உணவகம் காலை 6.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை திறந்திருப்பதுடன், தொழில் இல்லாதவர்களுக்கு இதன்மூலம் தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இதன்போது கலிகமுவ பிரதேச சபைத் தலைவர் சமன் ஜயசிங்க, வரக்காபொல மற்றும் வெலிகபொல பிரதேச சபைத் தலைவர்கள், கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர உட்பட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பொருளாதார நெருக்கடிக்கு...

04ஆம் பக்கத் தொடர்ச்சி....

இதிலிருந்து வெளிச்சத்திற்கு வருகின்ற விடயம் இதுவரையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திபற்றி எவ்வளவுதான் அரசியல் மேடைகளில் முழங்கினாலும் அரசாங்கத்திடம் சரியான பொருளாதார ஆலோசனை, வழிகாட்டுதலுக்கான நிபுணர்கள் இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில்தான் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வகட்சி மாநாடு கூட்டப்பட வேண்டும் என்று மைத்ரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார். இதிலும் ஒரு பின்னணி இருக்கின்றது. தற்போதைய பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவிக்கும் மக்கள், பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகயவின் பின்னால் அணிதிரள்கின்றனர். ஏற்கனவே அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வருவதற்காக வாக்களித்த 69 இலட்சம் மக்களுக்கும் கூட ஆளும் கட்சி மீது வெறுப்பு ஏற்படுமானால் அது ஸ்ரீல.சு.கட்சிக்கும் பலத்த அடியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. எப்படி துவம்சம் செய்யப்பட்டு வெறுமனே ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துடன் அதன் இருப்புக்காக போராடி வருகின்றதோ அதேநிலைதான் மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீல.சு.கட்சிக்கும் நடக்கவிருப்பது.

அதனால் ஏற்கனவே அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு சில அமைச்சுப் பதவிகளுடன் வெளியில் ஆங்காங்கே மக்கள் ஆதரவை தக்கவைத்துக்கொள்வதற்காக அரசாங்கத்தின் எதிரிபோன்று போட்டுவரும் போலி வேஷம் மக்களுக்கு விளங்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும் இந்தச் சூழ்நிலையில் ஏதோ செய்ததாக மக்களுக்கு வெளியில் காட்டுவதற்ககாவும் மைத்ரிபால வகுத்த வியூகமே இந்த சர்வகட்சி மாநாடாகும்.

1970 – 1977 வரையான 07 வருட கால ஸ்ரீல.சு. கட்சி தலைமையிலான ஆட்சியில் மக்கள் எதிர்நோக்கிய பட்டினிச் சாவு நிலையின் மறு உருவம்தான் இப்போது ஏற்பட்டிருப்பதும். இந்த அரசாங்கம் பதவிக்கு வருகின்றபோது 117 ரூபாவுக்கு இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் 254 ரூபாவுக்கும் 635 ரூபாவுக்கு இருந்த ஒரு கிலோ பால்மா பெக்கட் 1,900 ரூபா வரைக்கு விலை உயர்வடைந்திருக்கின்றது. 66 ரூபாவுக்கு இருந்த ஒரு கிலோ சம்பா அரிசி 200 ரூபா வரையில் உயர்வடைந்துவிட்டது. இவ்வாறு பார்க்கும்போது அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் கடந்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் 70 மடங்கு விலை உயர்வை எட்டியிருக்கின்றது.

அப்போதைய பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் மக்கள் அனுபவித்த துன்பம் காரணமாக 1977 பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்தன 5/6 (ஆறில் ஐந்து) பெரும்பான்மை பலம் பெற்று அமைத்த அரசாங்கம் 1994 வரையான 17 வருடங்களாக தொடர்ந்து தாக்குப் பிடித்தது. அப்போது மக்கள் அனுபவித்து துன்பங்களுக்கு முடிவு கட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டதால் நாடு ஒருவகையில் பொருளாதார அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் அடைந்து வந்தது எனலாம்.

தற்போது ஏற்பட்டுள்ள பஞ்சம், பொருளாதார கஷ்டம் காரணமாக எதிர்வரும் இரண்டு வருடத்தின் பின்னர் நடக்கவுள்ள தேர்தலிலும் அப்படியான ஓர் அரசியல் மாற்றத்திற்கு வழிவகுத்தால் அப்போது ஸ்ரீல.சு.கட்சிக்கும் கூட பாரிய பின்னடைவு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக இந்த சர்வகட்சி மாநாடு என்ற சிந்தனை வெளிப்பட்டதாகவே கருத முடிகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடி தீர்வு வேண்டும். அது அரசியல்வாதிகள் கலந்துரையாடி நேரத்தை வீணடித்து அரசியல் ஆதாயம் தேடும் கால விரயமாக இருக்கக்கூடாது. அதனால் மக்கள் எதிர்நோக்குகின்ற பட்டினிக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. கடந்த இரண்டு வருடங்களாக வெறுமனே கொரோனாவை காரணமாகக் கூறி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப போதுமான நடவடிக்கைகளை எடுக்காத அதற்கான வழிகாட்டல்களை செய்யாத இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட பொறுப்பான அதிகாரிகள் அனைவரையும் பதவியிலிருந்து நீக்கிவிட்டு சரியான திறமையும் தூரநோக்கில் சிந்தித்து யதார்த்தத்தை உணர்ந்து நாட்டின் நலனை கருத்திற்கொண்டு செயலாற்றும் பொருளாதார நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் ஜனாதிபதின் முன்னால் ஆமாம் போடும் ஆமாம் சாமிகளாக இருக்கக்கூடாது.

இதைவிட்டுவிட்டு அரசியல் பிரசித்தத்திற்கும் அல்லது தேர்தலை இலக்கு வைத்த வியூகமாகவும் சர்வகட்சி மாநாடு நடத்துவதில் எந்த பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. தற்போதைய நிலை மேலும் தொடரும் அறிகுறியே தென்படுகின்றது. டொலர் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டுள்ள விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவே அவசரமாக திட்டம் தேவைப்படுகின்றது. அதற்காகவே ஜனாதிபதியும் அமைச்சரவையும் திட்டங்களை முன்வைக்க வேண்டும். அதுவே அவசர தேவையாகும்.

# வடமாகாண கல்வி அமைச்சின் வாயிலை மறித்து தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

வீடியோவைக் காண...




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் வாயிலில் வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களது நியமனம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் அமைச்சுக்கு வருகைதந்திருந்தபோதிலும், அதற்கான பதில் கிடைக்காமல் நேற்று அவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று அதிகாலையிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஆசிரியர்கள் காலையில் அலுவலகத்திற்கு வருகை வந்த உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் தலையீட்டால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். வடமாகாணத்தைச் சேர்ந்த 186 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்க இணைப்பாளர் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில்





(வன்னி செய்தியாளர்)

யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்ற காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட பிரதமர் வருகைக்கு எதிரான போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வருகைதந்திருந்த நிலையில், அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என கேட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் எதிர்ப்புப் போராட்டமொன்று மட்டுவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக முல்லைத்தீவிலிருந்து சென்றிருந்த ஈஸ்வரி உள்ளிட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சென்ற பஸ்ஸை மட்டுவில் அம்மன் கோவிலடியில் இடைமறித்த பொலிஸார் பஸ்சிலிருந்து எவரையும் கீழே இறங்கவிடாது தடுத்ததுடன் பஸ் கதவை மூடி இடையூறை ஏற்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் பஸ்சிலிருந்து அனைவரையும் இறங்க அனுமதிக்குமாறு கோரியும் தமது போராட்டத்துக்கு தடை ஏற்படுத்திய பொலிஸாரின் நடவடிக்கையை கண்டித்தும் பஸ்ஸின் நடுவே வீதியில் கிடந்து முல்லைத்தீவு காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சங்க இணைப்பாளர் ஈஸ்வரி போராட்டம் மேற்கொண்டதோடு பொலிஸாரோடு வாக்குவாதப்பட்டு பஸ்ஸில் அடைக்கப்பட்டிருப்பவர்களை கீழே இறக்க போராட்டத்தில் ஈடுபட்டார். இதன்போது பொலிஸாருக்கும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் இடையில் பெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதன்போது பஸ்சின் வாசல்படியிலிருந்து பொலிஸாரால் கீழே இழுத்தெறியப்பட்ட ஈஸ்வரி பலமாக கீழே விழுந்து நிலத்தில் அடிபட்ட நிலையில் அங்கிருந்த பொலிஸார் சப்பாத்துக் கால்களால் வயிற்றுப்பகுதியில் மிதித்துள்ளதோடு தாக்குதலும் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் தாக்குதலால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்க இணைப்பாளர் ஈஸ்வரி, போராட்டம் நிறைவுற்று முல்லைத்தீவிலுள்ள தனது வீட்டுக்கு சென்ற நிலையில் வாந்தி எடுத்தபின்னர் மயக்கமுற்று கீழே விழுந்தபோது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு உறவினர்களால் கொண்டுசெல்லப்பட்டு சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கரவெட்டி கமநலசேவை நிலையத்தில் 55ஆவது தேசிய புத்தரிசி விழா



(யாழ். நிருபர்)

55ஆவது தேசிய புத்தரிசி விழாவிற்கான அரிசியினை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா நேற்று முன்தினம் (21) யாழ்ப்பாணம் கரவெட்டி கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# மன்னார் மாவட்டத்தில் காலநிலை மாற்றம், சூழல் பாதுகாப்பு தொடர்பான விசேட கருத்தரங்கு

(மன்னார் நகர் நிருபர்)


மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'பூகோள மற்றும் பிராந்திய ரீதியிலான காலநிலை மாற்றமும் அதற்கான தீர்வுகளும்' எனும் தொனிப்பொருளில் சூழல் பாதுகாப்பு தொடர்பான விசேட கருத்தரங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (21) காலை 10.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கின் வளவாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீப் ராஜா கலந்துகொண்டு கருத்துகள் வழங்கினார்.

இந்த கருத்தரங்கில் சட்டரீதியாகவும், சட்ட விரோதமாகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் அதிகளவான மணல் அகழ்வு, காடழிப்புகளால் நீர் மற்றும் நில வளங்களின் பாதிப்பு தொடர்பாகவும் காற்றாலை மின்சார கோபுரங்களால் கடல் வளத்திற்கும் பறவைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் விசேட கருத்துரைகள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு, முசலி, மடு போன்ற பிரதேசங்களில் சூழல் பாதுகாப்பு செயல்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்பினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் அறிமுக விழா யாழில்





(வவுனியா நிருபர்)

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் கருவி மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்பும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய, 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் அறிமுக விழா யாழ். நாச்சிமார் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும் வீரகேசரி இதழின் பிரதம ஆசிரியருமான எஸ். ஸ்ரீகஜன் தலைமை தாங்கியதுடன், ஊடகவியலாளரும் எழுத்தாளருமாகிய ஷர்மிளா வினோதினி நிகழ்வுகளை சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளுக்காக செயற்பட்டு வருகின்ற கருவி அமைப்பின் தலைவர் க.தர்மசேகரம் வரவேற்புரையாற்றினார். நிகழ்வின் தலைவர் ஸ்ரீகஜன் தலைமையுரையாற்றினார். 'எங்கட புத்தகங்கள்' சஞ்சிகையின் ஆசிரியரும் அந்த நிறுவனத்தின் நிறுவுனருமாகிய குலசிங்கம் வசீகரன் வாழ்த்துரை வழங்கியிருந்தார்.

ஊடகவியலாளர் யாழ். தர்மினி பத்மநாதன் நூலை அறிமுகம் செய்து உரையாற்றியிருந்ததுடன், வண்ணை காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் உப தலைவர் செல்லத்துரை திருமூர்த்தி நூலின் சிறப்புப் பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் உளவியல் மருத்துவ நிபுணர் சு.சிவதாஸ் தனது துறைசார்ந்த நிலையில், 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் பற்றிய பார்வையை தனது உரையில் செலுத்தியிருந்தார். யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.இரோஜஸ்கண்ணன் இந்நூலின் சமூகவியல் முக்கியத்துவம் குறித்து கருத்துரையாற்றினார். நூலாசிரியரின் ஏற்புரையைத் தொடர்ந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா நன்றியுரையாற்றினார்.

விழா ஏற்பாட்டாளர்களின் சார்பில் கல்வியலாளர்களும் முக்கியஸ்தர்களும், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சார்பில் ஸ்ரீகஜன் மற்றும் யாழ். ஈழநாடு இதழின் ஆசிரியர் இராசநாயகம் பாரதி ஆகியோரும் நூலாசிரியரையும் அவரது துணைவியாரையும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் உரையாற்றியவர்களுக்கு நூலாசிரியரினால் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன், பல்கலைக்கழகக் கல்வியலாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என பல்துறை சார்ந்தவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த வருடத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச தினமாகிய டிசம்பர் 3ஆம் திகதி மன்னார் மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினரால் அதன் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திரகலாவின் தலைமையில் 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் வெளியீடு செய்யப்பட்டது என்பதும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கருவி அமைப்பின் முக்கிய பங்களிப்புடன் அந்நூலின் அறிமுக விழா நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கரவண்டி மீது கனரக வாகனம் மோதி விபத்து; ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர்ச்சந்தி-இராமாவில் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று (22) மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டி மீது கனரக வாகனம் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதில் முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான சு.விஜிதன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

திகதி 21.03.2022
திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4713
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,175,760.00
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 6 1 6 8 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,219,674.00

Mega POWER
மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1061
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,006,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 243,045,882.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 05
வெற்றி இலக்கங்கள்: 01 06 43 66

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 743
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,732,760.00
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 01 29 61 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 103,657,464.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக நீர் தின நிகழ்வு



(வவுனியா நிருபர்)

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா ஆனந்தபுரம் கிராமத்தில் உலக நீர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி ரஷான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமாகிய குலசிங்கம் திலீபனின் இணைப்புச் செயலாளர் கி.டினேஸ், மாவட்ட செயலாளர் சரத்சந்திரா, சமளங்குளம் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் சமூக நீர்வழங்கல் அமைப்பின் குழுவினர் கிராம மக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் கிராம சிறுவர்களிடையே நீர்தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட சித்திரப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குபரிசில்கள் வழங்கப்பட்டன. சிறுநீரகநோயாளிக்கு மண்ணிலான நீர் வடிகட்டி ஒன்றும் வழங்கப்பட்டது. தொடர்ந்து மரம் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

## மட்டு. கல்லடி பாலத்துக்குக்கீழ் பெண்ணொருவரின் சடலம் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டு. கல்லடி பாலத்துக்குக்கீழ் பெண்ணொருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு கீழ் நேற்று நண்பகல் 12 மணியளவில் பெண்ணொருவரின் சடலம் காணப்படுவதாக பொதுமக்கள் வழங்கிய தகவலுக் கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

25 – 30 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டவர் எனவும் குறித்த சடலம் யாருடையது என அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# ஒரு கோடியே 65 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இலுப்படிச்சேனையில் வர்த்தக மையக் கட்டடம்



(ஏறாவூர் நிருபர்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு - இலுப்படிச்சேனை பிரதேசத்தில் வர்த்தக மையக் கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென ஒரு கோடி 65 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் வீ.பற்குணம் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சர்வானந்தன் தலைமையில் இக்கட்டடத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷார ஹேமச்சந்திர பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் எமது பிராந்திய செய்தியாளர் எம்.ஜி.ஏ.நாஸர் உள்ளிட்ட ஐந்து ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த கால போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்ட இலுப்படிச்சேனை பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இப்பிரதேசத்தில் வர்த்தக மையக் கட்டடம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதிய சந்திக்கும் சம்பந்தர் குழுவில ரெலோ போகமாட்டம் என்று சொன்னாங்க எலுவா.. போற போகாதது அந்த கட்சி விருப்பம்.. ஆனா ரெலோ தலைவர் செல்வம் தம்பி சொன்ன காரணத்த பார்த்தா ஒருபக்கம் சிரிப்பாகவும் மறுபக்கம் பயமாகவும் இருக்கு..என்ன தெரியுமா ரெலோ தலைவர் சிறிசபாரெத்தினம்.. புலிகள் தலைவர் பிரபாகரனும் எடுத்த முடிவு மாதிரித்தான் இந்த முடிவாம்.. அப்படி எண்டால் அவங்க ஆயுத பலத்த வச்சி முடிவு எடுத்தாங்க.. இப்ப ரெலோவும் அவங்கள போல ஆயுதம் ஏந்தப்போறாங்களோ..? என்ன நான் கேக்கிறதுல தப்பு இருக்கா?

## கோழி இறைச்சி, முட்டையின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் விசனம்

(காத்தான்குடி நிருபர்)

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

காத்தான்குடி மற்றும் அண்மித்த பிரதேசங்களில் கோழி இறைச்சி மற்றும் கோழி முட்டை ஆகியவற்றின் விலைகளும் சடுதியாக உயர்ந்துள்ளதுடன், புரைலர் கோழி இறைச்சி கிலோ 930 ரூபா வரையிலும் கோழி முட்டை ஒன்று 32.00 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுவதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.




முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை உயர்வால் அன்றாட உணவுக்கு முட்டையையேனும் சமைத்து சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## தாய், தந்தைக்குள் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த 17 வயது மாணவி மண்ணெண்ணெய் அருந்தி மரணம்

(கந்தளாய் நிருபர்)



தந்தைக்கும் தாய்க்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் மண்ணெண்ணெய் அருந்தி திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மூன்று வாரங்களுக்குப் பின்னர் நேற்று (22) உயிரிழந்துள்ளார்.

கந்தளாய், கோவில்கிராமம் செஞ்சிலுவைச் சங்க கிராமத்தைச் சேர்ந்த லக்ஷிகா இராமநாதன் என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி எனக்கும், எனது கணவருக்கும் இடையே சிறு வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த மகள் சத்தம் போட்டார். அப்போது அவளை வாயை மூடிக் கொள்ளும்படி கணவர் கத்தினார். சிறிதுநேரத்தின் பின்னர் வீட்டில் இருந்த மண்ணெண்ணெயை எடுத்து மகள் குடித்துக்கொண்டிருந்தது தெரியவந்தது. நான் போய் என்ன செய்தாய் என்று கேட்டேன். அப்போது அவரது வாயிலிருந்து நுரை வெளியேறியது.

உடனடியாக மகளை கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்பு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் சிறுமியின் தயார் என்.நாகராணி தெரிவித்தார்.

தனதுமகள் சுமார் மூன்று வாரங்களாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ள நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## சட்டம், ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதற்காக ஆலையடிவேம்பில் விசேட கலந்துரையாடல்





(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் உடனான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று (22) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பரிமலவாணி சில்வெஸ்டர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பொலிஸ் திணைக்களத்துடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் இணைந்து செயற்படுவது தொடர்பில் ஆராயும் முகமாக ஏற்பாடுசெய்யப்பட்ட இக்கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில் பொலிஸாரும் பிரதேச செயலகமும் இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். மேலும் சட்டம், ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு பிரதேச செயலகத்திற்கு பொலிஸ் திணைக்களம் வழங்கவேண்டிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

இதேநேரம் இங்கு உரையாற்றிய மக்கள் தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத் தானும் தனது பிரிவும் பொலிஸ் நிலையமும் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்த எவ்வேளையிலும் தயாராக உள்ளதாகவும் பிரதேச செயலகத்திற்கும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இதன் முதற்கட்டமாக வாரம் இரு நாட்களில் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் பிரிவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை கடமையில் அமர்த்தவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வாரம் இரண்டை தெரிவு செய்யவும் முடிவுசெய்யப்பட்டது.

## தையல் பயிற்சி நிலையம் மீராவோடையில் திறப்பு





(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடையில் தையல் பயிற்சி நிலையமொன்று நேற்று முன்தினம் (21) திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட கல்குடா தொகுதி ஆடைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த தையல் பயிற்சி நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேச செயலக செயலாளர் வீ.தவராஜா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், கணக்காளர் எம்.ஐ.ஸஜ்ஜாத், தையல் பயிற்சி நிலையத்தின் தலைவர் எம். மன்சூர், பொருளாளர் ஐ.எம்.றிஸ்வின், மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திருமலையில் அதிகாலை ஒரு மணியிலிருந்து எரிவாயு கொள்வனவுக்காக வரிசையில் காத்திருப்பு







(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் திருகோணமலை நகரில் லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகஸ்தரின் களஞ்சியசாலையிலிருந்து சுமார் 400இற்கும் மேற்பட்ட வெற்று சிலிண்டர்களுடன் நடுவீதியில் நேற்று (22) அதிகாலை ஒரு மணிமுதல் சமையல் எரிவாயு கொள்வனவிற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், குறித்த விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் ஒரு தொகுதி திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்திற்கு அனுப்புவதாகவும் மிகுதி இருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை உணவகங்களுக்கு ஒதுக்கியதன் பின்னர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவ்வாறு வழங்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் போதுமானதாக இல்லை எனவும் வாடிக்கையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.


இவ்வாறிருக்கையில் வருகைதரும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அனைத்தும் வாடிக்கையாளர்களுக்கு முழுமையாக வழங்கப்படுவதாகவும் லிட்ரோ சமையல் எரிவாயு திருகோணமலை விநியோகஸ்தர் தெரிவித்தார்.

இருப்பினும் நேற்று அதிகாலை ஒரு மணிமுதல் வயோதிபர்கள், பெண்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலர் நீண்ட வரிசையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக வீதியில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெஹியத்தக்கண்டியில் பல்லின சமூகங்களின் நல்லிணக்க நடைபவனியும் கலாசார நிகழ்வும்







(கல்முனை நிருபர்)

சமாதானமும் சமூகப் பணி நிறுவனத்தின் (PCA) அனுசரணையில் இனங்களிடையே சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பல்லின சமூகங்களை ஒன்றிணைத்து இயங்கி வரும் அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழு மற்றும் பிரதேச நல்லிணக்கக் குழுக்களின் ஏற்பாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க இனங்களை ஒன்றிணைத்து தெஹியத்தக்கண்டியில் நல்லிணக்க நடைபவனியும், கலாசார விளையாட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் (21) இடம்பெற்றன.

தெஹியத்தக்கண்டி பிரதேச பிரதான வீதி சுற்றுவட்ட சந்தியிலிருந்து ஆரம்பமான சமாதான நல்லிணக்க நடைபவனியானது தெஹியத்தக்கண்டி மகாவலி மைதானம் வரை சென்றடைந்தது. இதன்போது எதிர்கால சந்ததியின் நலனுக்காக ஒன்றிணைவோம், நீதி, சுதந்திரம், புரிந்துணர்வை உறுதிப்படுத்தி சமாதானத்தை கட்டியெழுப்புவோம், தனித்துவம் கலாசாரம் விழுமியங்களை மதித்து இன ஐக்கியத்தை கட்டியெழுப்புவோம் ஆகிய வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு நல்லிணக்க பதாகைகள் கொண்டு குறித்த நடைபவனி இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தெஹியத்தக்கண்டி மகாவலி மைதானத்தில் கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தெஹியத்தக்கண்டி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், தெஹியத்தக்கண்டி பொலிஸ்நிலைய சுற்றுசூழல் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட சமாதானம் மற்றும் சமூகப் பணி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் டி.இராஜேந்திரன், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், தெஹியத்தக்கண்டி, நாவிதன்வெளி, சம்மாந்துறை, இறக்காமம், உகன, மகாஓயா, பதியதலாவ ஆகிய 07 பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாவட்ட நல்லிணக்கக் குழு இணைப்பாளர்கள், பிரதேச நல்லிணக்க மன்ற இணைப்பாளர்கள், நல்லிணக்க மன்ற உறுப்பினர்கள் பிரதேச நல்லிணக்கக் குழு இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஒலிபெருக்கி பாவனையை கட்டுப்படுத்த பொதுமக்கள் வேண்டுகோள்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதைகளில் ஒலிபெருக்கி மூலம் வர்த்தகம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் பொதுமக்கள் பாரிய சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர். இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று பிரதேச பிரதான மற்றும் உள் வீதிகளில் சிறிய வர்த்தகர்கள் முதல் பெரிய வர்த்தகர்கள் வரை கூடுதலான ஒலி எழுப்பக்கூடிய ஒலிபெருக்கிகளை பாவித்து வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதனால் மாணவர்கள் உட்பட குழந்தைகளும், பொதுமக்களும் தங்களது இயல்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர். பகல் வேளையிலும் இரவு நேரங்களிலும் இவ்வாறான கூடிய ஒலியுடன் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இதனால் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள், சிறிய குழந்தைகள் மிகக் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களது வீடுகளில் தூங்க முடியாத வண்ணமும், மாணவர்கள் மாலை வேளையில் மீட்டற் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாமலும் தவித்து வருகின்றார்கள். பாரிய ஒலி மாசு ஏற்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட காலத்தில் சிறுவர்கள் உட்பட்ட முதியோர்களுக்கு செவி தொடர்பான நோய்கள் ஏற்படுவதுடன், எதிர்காலத்திலும் அவை அதிகரிக்கலாம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேசத்தினுள் ஒலிபெருக்கி மூலம் வர்த்தகம் செய்வதனை தடைசெய்வதுடன், அனுமதிப் பத்திரத்தை இரத்துச்செய்யுமாறும் இவ்வாறான ஒலி மாசடைவை தடுப்பதற்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், மாநகர ஆணையாளர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கதறக் கதற எரித்த சாபத்தையே ஆட்சியாளர்கள் அனுபவிக்கிறார்கள்

## மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் சம்மாந்துறையில் முழக்கம்

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கதறக் கதற எரித்த சாபத்தையே இந்த ஆட்சியாளர்கள் அனுபவித்து வருகிறார்கள் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் நாட்டுமக்களை படுபாதாளத்துக்குள் அரசாங்கம் தள்ளியுள்ளது.

நாட்டுமக்களின் சாபத்தைப் பெற்ற அரசாங்கமாக இது இருக்கிறது. வீட்டுக்குப் போங்கள் என்று சொல்லுமளவுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை இளைஞர் காங்கிரஸின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர்



ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று பிச்சை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இந்தியா ஒரு பில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இது இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிந்துவிடும். அதற்குப் பிறகு எந்த நாட்டில் போய் வாங்குவது. மீண்டும் இவ்வாறான நெருக்கடி ஏற்படும். இவ்வாறான நிலைமை கடந்த காலங்களில் கிரேக்கத்திலும், லெபனான் போன்ற நாடுகளிலும் ஏற்பட்டிருந்தன எனவும் தெரிவித்தார்.

அந்த நாடுகளில் அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சியை அமைத்தாலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. அவ்வாறான நிலைமைதான் எமது நாட்டுக்கும் ஏற்படப் போகின்றது எனவும் தெரிவித்தார்.

# கல்முனையில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

## பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வீடுகளிலுள்ள பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த நகைகள் அண்மைக்காலமாக தொடர்ந்து கள்வர்களால் திருடப்பட்டு வருகின்றன.

எனவே, இதனைக் கட்டுப்படுத்துவதற்கும் குறித்த கள்வர்களை கைது செய்வதற்கும் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், பொதுமக்கள் இந்த நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளனர்.

இதனடிப்படையில் பொதுமக்கள் பாதுகாப்புப் பெறவேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் மக்களை தெளிவுபடுத்தும் விதமாகவும் கல்முனை பொலிஸார் ஒலிபெருக்கி மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை கல்முனை பொலிஸ் பிரிவுக்குள் முன்னெடுத்துள்ளனர்.

வீட்டிலுள்ள அனைவரும் வெளியில் செல்ல நேர்ந்தால் தங்களது பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த நகைகளை பாதுகாப்பான இடங்களில் வைத்து நன்கு பூட்டிவிட்டு அனைத்து திறப்புகளையும் தங்களுடனேயே கொண்டுசெல்லுமாறும் பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆரையம்பதியில் ஆணொருவர் தீயில் கருகி உயிரிழப்பு; மரணித்தவரின் மகள், மருமகன் 14 நாட்கள் விளக்கமறியலில்

(கனகராசா சரவணன்)

மட்டு. காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி செல்வநகர் பகுதியில் ஆண் ஒருவர் தீயில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட அவரது மகள், மருமகன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் (21) மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

ஆரையம்பதி செல்வநகரைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும் தனியார் வங்கி ஒன்றில் பாதுகாவலராக கடமையாற்றி வந்தவருமான 54 வயதுடைய சடாச்சரலிங்கம் ஜீவநாயகம் என்பவரே தீயில் கருகிய நிலையில் சிகிச்சை பலனின்றி 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மதுபோதையில் தினமும் மனைவியுடன் சண்டையிட்டுக்கொண்டு தனக்குத்தானே தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வை என மிரட்டிவந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவதினமான கடந்த 19ஆம் திகதி இரவு இவ்வாறே மனைவியுடன் சண்டையிட்டு தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வை என மிரட்டியபோது விடுமுறையில் அங்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் மகன் மற்றும் மகள், மருமகன் கோபம் கொண்ட நிலையில் தீயை பற்றவைத்து அவர் மீது எறிந்ததையடுத்து அவர் தீயினால் எரிந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் அவரது மனைவியை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதனுடன் தொடர்புடைய உயிரிழந்தவரின் மகனான பொலிஸ் உத்தியோகத்தர், அவரது மகள், மருமகன் தலைமறைவாகி வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தலைமறைவாகி வந்த உயிரிழந்தவரின் மகள், மருமகன் நேற்று திங்கட்கிழமை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில், அவர்களை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்முனைப்பற்றில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

சுபீட்சத்தின்பால் நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்திற்கமைவாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2022'இற்கு அமைவாக மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் நேற்று முன்தினம் (21) இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் வழங்கப்பட்டுள்ளது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டிருந்ததுடன், பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களையும்





வழங்கினார்.

இவ்வாண்டிற்காக நிறைவேற்றப்பட்டுள்ள அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைவாக அதன் முதல் காலாண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரத்திற்கு நான்கு மில்லியன், கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு மூன்று மில்லியன் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 100 மில்லியன் அபிவிருத்தித் திட்டங்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில் 85 பயனாளிகளுக்கான வாழ்வாதார மேம்பாட்டு உதவித்திட்டங்கள் இதன்போது இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளினால் வழங்கப் பட்டுள்ளன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் யோகநாதன் றொஸ்மன், மண்முனைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினரும் முற்போக்கு தமிழர் கழகத்தின் ஆரையம்பதிக்கான பிரதான கள இணைப்பாளருமான சுரேந்திரன், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எம்.ஜெயச்சந்திரன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பயனாளிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் சைக்கிள் உள்ளிட்ட பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இவற்றைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் அரசாங்கத்திற்கும் இராஜாங்க அமைச்சருக்கும் தமது நன்றிகளை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிவில் பாதுகாப்புக் குழுவினால் சஹ்ரானுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகள் இனங்காணப்பட்டமை பெருமையளிக்கிறது

## சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்சுதீன் புகழாரம்

(மாளிகைக்காடு நிருபர்)

சஹ்ரானுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகள் சாய்ந்தமருதில் பதுங்கியிருந்தபோது அவர்களை இனங்காட்டி, நாட்டில் இடம்பெறவிருந்த பாரிய அனர்த்தத்தை தவிர்த்தது,







இங்கிருந்த சிவில் பாதுகாப்புக் குழுவே என்றும் அதன்காரணமாக குறித்த சிவில் பாதுகாப்புக் குழுவினர் அரசாங்கத்தால் கௌரவிக்கப்பட்டது சாய்ந்தமருதுக்குக் கிடைத்த கௌரவம் என்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சமூக பாதுகாப்புக் குழுக்களை அமைக்கும் திட்டத்தின்கீழ் சாய்ந்தமருது 10ஆம், 17ஆம் பிரிவுகளுக்கான குழுக்களை அமைக்கும் செயற்பாடு, கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது இளைஞர் வள நிலையத்தில், கிராம சேவை உத்தியோகத்தர் எல்.நாஸர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தகாலங்களில் சாய்ந்தமருதில் இருந்த சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சிறந்த முறையில் செயற்பட்டன. அதுபோன்று புதிதாக அமையவுள்ள சமூக பாதுகாப்புக் குழுக்களும் செயற்படவேண்டும். அப்போதுதான் கடந்த காலங்களில் பெற்றதுபோன்று உயரிய கௌரவத்தை பெற்றுக்கொள்ள முடிவதுடன், நாங்கள் எதிர்கால சந்ததிக்கு சிறந்த ஒழுக்கமான பிரதேசம் ஒன்றைக் கையளிக்க முடியும். எனவே, மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் பொலிஸார் தரப்பில் முடியுமான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதேசத்துக்குள் புதிதாக உட்புகுபவர்கள் விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடனும் அவதானமாகவும் இருக்கவேண்டும் என்றும் தற்சமயம் ஆங்காங்கே இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கும் இந்தக் குழுக்களின் ஒத்துழைப்பு மிகுந்த உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் விடயத்திலும் அவற்றைக் கட்டுப்படுத்த சமூக பாதுகாப்புக் குழுக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வின்போது இரண்டு பிரிவுகளுக்குமான சமூக பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. நிகழ்வின்போது கடந்த காலங்களில் இரு கிராம சேவகர் பிரிவுகளிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் தலைவர்களாக கடமையாற்றிய எம்.எம்.உதுமாலெப்பை மற்றும் அஸீஸ் ஆகியோரும் கிராமங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்களான எச்.எம்.ஜே.எஸ்.ஹேரத், வி.சதுர்சன் ஆகியோரும் கிராமங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# செங்காமம் பிரதேசத்தில் பாழடைந்த நிலையிலிருந்த சுகாதார நிலையம் மீளப் புனரமைக்கப்பட்டு கையளிப்பு

(பொத்துவில் நிருபர்)

பொத்துவில் செங்காமம் பிரதேசத்தில் கைவிடப்பட்டு பாழடைந்த நிலையில் காணப்பட்ட சுகாதார நிலையம் மீளப் புனரமைக்கப்பட்டு மக்கள் சேவைக்காக கையளிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் ஊடாக அப்பகுதி மக்கள் நன்மையடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



டொக்டர்.ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

செங்காமம் பிரதேசத்தில் கைவிடப்பட்டு பாழடைந்த நிலையில் காணப்பட்ட சுகாதார நிலையம் மீளப் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் (21) மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது. பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.யூ.அப்துல் சமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

செங்காமம் மீள்குடியேற்றக் கிராமத்தில் சுகாதார நிலையமொன்று கைவிடப்பட்டு பாழடைந்துள்ள நிலையில் உள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறியக்கிடைத்தது. இதனையடுத்து அப்பகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு நிலமைகளைப் பார்வையிட்ட போது குறித்த சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. அப்போது அப்பகுதி மக்களும் எங்களைச் சந்தித்து அதனைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

மக்களுடைய நியாயமான கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு தற்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும் கூட அதிகமான நிதிகளை செலவுசெய்து சுகாதார நிலையத்தினை புனரமைத்து மக்கள் சேவைக்காக கையளித்திருக்கின்றோம். எனவே, கடந்த காலங்களைப்போலல்லாது இதனைச் சிறந்த முறையில் பாதுகாப்பது இப்பகுதி மக்களுடைய பொறுப்பாகும். அப்போதுதான் இங்குள்ள மக்கள் இச்சுகாதார நிலையத்தின் ஊடாக நன்மையடைய முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹிம், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.ஏ.வாஜித், திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர். சுகாதார முகாமைத்துவப் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜிப், பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப், கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளர். டொக்டர் எம்.ஏ.நபீல், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம்.மலிக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரம்மோற்சவத்தின் பூங்காவனத் திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது சக்தி கலாலயா மாணவிகளினால் நிகழ்த்தப்பட்ட நடன நிகழ்வினையும், ஆலயத்தின் ஆதீனகர்த்தா வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்களினால் புகைப்படக் கலைஞர் தா.பாக்கியநாதன் எதிர்பார்ப்பு இல்லாத சிறந்த சேவைக்காக பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

(படங்கள்: கந்தளாய் நிருபர்)

# பங்களாதேஷ், உணவு – விவசாய அமைப்புடனான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் பேச்சு

பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான 36ஆவது உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய மாநாட்டின் அமைச்சர்கள் மட்ட அமர்வில் இலங்கையின் விவசாயத்துறை மற்றும் உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் எழுந்துள்ள சவால்கள் குறித்து விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே விளக்கினார்.

கடந்த 8ஆம் திகதிமுதல் 11ஆம் திகதிவரை நடைபெற்ற ஊடாடும் அமர்வுகளில், நாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் புதுமையான நடவடிக்கைகளை அமைச்சர் எடுத்துரைத்தார்.

மாநாட்டின் பக்க அம்சமாக, கடந்த 10ஆம் திகதி உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கு டோங்யுவுடன் அமைச்சர் ஆக்கபூர்வமாக கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

கலந்துரையாடலின்போது, தெற்காசியாவின் முக்கிய விவசாய நாடுகளில் இலங்கையும் ஒன்று என்றும், விவசாயத்துறையில் இலங்கைக்கு வரலாற்று நன்மைகள் இருப்பதால் வறுமை ஒழிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வது சிறிய தீவுக்கு சவாலான விடயம் அல்ல என்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

நாட்டின் விவசாயத்துறையில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு தளமாக உணவு மற்றும் விவசாய அமைப்பைப் பயன்படுத்துமாறு அவர் இலங்கைக்கு அழைப்பு விடுத்தார். இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான உணவு மற்றும் விவசாய அமைப்பின் தயார்நிலையை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.



இலங்கையின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சர் விளக்கினார்.

பங்களாதேஷுடனான விவசாய ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தி, மேம்படுத்துவதற்காக, அமைச்சர் அலுத்கமகே, பங்களாதேஷ் விவசாய அமைச்சர் கலாநிதி முஹம்மட் அப்துர் ரசாக்குடன் கடந்த 11ஆம் திகதி இருதரப்புக் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பினரும் மேற்கொண்டுள்ள இருதரப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில், பரஸ்பரம் ஏற்றுமதிப் பொருட்களை மேம்படுத்தி வலுப்படுத்துவது குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

உயர்ஸ்தானிகர் பேராசிரியர் சுதர்சன் செனவிரத்ன, விவசாய தொழில்நுட்ப மேலதிக செயலாளர் கலாநிதி காமினி சமரசிங்க, பிரதி உயர்ஸ்தானிகர் ருவந்தி தெல்பிட்டிய மற்றும் டாக்காவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (வணிகம்) ஸ்ரீ மாலி ஜயரத்ன ஆகியோர் இந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொண்டனர்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான 37ஆவது உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய மாநாடு 2024இல் இலங்கையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ லங்கா මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 22.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 54 7 | 10 687 |
| கனேடியன் டொலர் | 105 4286 | 114 6 63 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 31 6248 | 33 6031 |
| யூரோ | 2 1 5543 | 202 4556 |
| ஜப்பான் யென் | 1 1655 | 1 2646 |
| சிங்கப்பூர் டொலர் | 1 0 2706 | 1 8 427 |
| ஸ்ரேலிங் பவுன் | 248 766 | 261 5725 |
| சுவிஸ் பிராங்க் | 180 6270 | 2 26 60 |
| ஐ.அ.டொலர் | 161 574 | 171 3845 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 631 5255 |
| குவைட் | குவைட் தினார் | 810 2446 |
| ஓமான் | ஓமான் றியால் | 616 1522 |
| கட்டார் | கட்டார் றியால் | 65 5 63 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 63 5257 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 65 12 8 |

# இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி கைது

இரும்புப்பொருட்களை சேகரிக்கும் நிலையமொன்றில் சட்டவிரோதமான திருட்டு பொருட்களை வைத்திருந்ததாக தெரிவித்து, சட்ட ரீதியான நடவடிக்கைகளிலிருந்து விடுவிப்பதற்காக 15 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் பேலியகொடை பொலிஸ்



நிலையத்தில் சேவையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இலஞ்ச ஊழல்கள் தொடர்பான ஆணைக்குழுவினரால் நேற்று முன்தினம் (21) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் இரும்புப்பொருட்களை சேகரிக்கும் நிலையமொன்றின் உரிமையாளரினால் இதுகுறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாட்டுக்கமையவே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் இதற்கு முன்னரும், வேறு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியபோது இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்திலும் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன்போது அவர் அந்த வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# இருதரப்பு உறவுகள் குறித்து எகிப்திய தூதுவருக்கும் வெளிநாட்டு அமைச்சருக்கும் இடையில் பேச்சு

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான எகிப்தியத் தூதுவர் மகேத் மொஸ்லே, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸை கடந்த 19ஆம் திகதி கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சந்தித்துள்ளார்.

இலங்கையிலான அவரது பதவிக்காலத்தின் போது அவருடன் நெருக்கமாகப் பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இரு தரப்பினரும் இரு நாடுகளுக்குமிடையிலான பன்முக இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான பரந்தளவிலான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதுடன், முக்கியமான உலகளாவிய சமகாலப் பிரச்சினைகள் குறித்து கருத்துகளை பரிமாறிக்கொண்டுள்ளனர். நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் பீரிஸ் எகிப்தியத் தூதுவருக்கு விளக்கமளித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலில் எகிப்து குடியரசு இலங்கைக்கு ஆதரவு தெரிவித்தமைக்காக அமைச்சர் பீரிஸ் எகிப்தியத் தூதுவருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறுபட்ட அரங்குகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமையை இலங்கை மதிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்விற்கான இலங்கையின் ஏற்பாடுகள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் கலந்துரையாடியுள்ளார்.



மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக ஒத்துழைப்பு மற்றும் உரையாடல் சார்ந்த எண்ணக்கருவில் ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்துடனான நீண்டகால ஈடுபாட்டுக் கொள்கையை இலங்கை தொடரும் எனக் குறிப்பிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், இலங்கை தனது அரசியலமைப்பின் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட மனித உரிமை சார்ந்த கடமைகள் மற்றும் தானாக முன்வந்து ஏற்றுக்கொண்ட சர்வதேச கடமைகளுக்கு கட்டுப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் குறிப்பாக, மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வின்போது இலங்கைக்கு தொடர்ச்சியாக எகிப்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்குமாறு அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளதுடன், எதிர்வரும் 51ஆவது கூட்டத்தொடர் உட்பட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான எகிப்தின் தொடர்ச்சியான ஆதரவை தூதுவர் மகேட் மொஸ்லே உறுதியளித்துள்ளார்.

நீண்டகால சுமுக உறவுகளைப் பாராட்டி, 2022ஆம் ஆண்டு இலங்கை - எகிப்து இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 65ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு நிகழ்வுகளை ஏற்பாடுசெய்வதற்கு இரு தரப்பினரும் கலந்துரையாடி இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நிலுவையிலுள்ள வரைவு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விரைந்து நிறைவுசெய்தல், தீவிரவாதத்திற்கு எதிரான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், சகிப்புத்தன்மை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவித்தல், தீவிரமயமாக்கலை இல்லாதொழித்தல், எகிப்தின் மதிப்புமிக்க கலாசார மற்றும் மத நிறுவனங்களின் மூலம் மதங்களுக்கு இடையிலான உரையாடலை முன்னெடுத்தல் மற்றும் 2022இல் கொழும்பில் வெளிநாட்டு அமைச்சுகளுக்கு இடையிலான இருதரப்பு அரசியல் ஆலோசனைகளின் இரண்டாவது அமர்வை நடத்துதல் ஆகியன குறித்தும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பரஸ்பர ஆர்வத்தின் பிராந்திய மற்றும் சர்வதேச அபிவிருத்திகள் மற்றும் ஒத்த கருத்துடைய பிராந்தியத் தொகுதிகளுடன் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியன குறித்தும் இதன்போது மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# மாணவி ஆய்ஷத் ருகையா களுத்துறை மாவட்ட மட்டத்தில் முதலிடம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் 182 மதிப்பெண்களைப் பெற்று களுத்துறை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ள களுத்துறை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய மாணவி ஆய்ஷத் ருகையா அர்ஷாத் தனது கல்லூரிக்கும் களுத்துறை மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



இவர், அர்ஷத் ஜமால் - ஆசிரியை நஸுஹா ரியால் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார். மேலும் இவரது இச்சாதனைக்கு அவரது வகுப்பாசிரியை திருமதி சிஹாரா ஹாரூன் பக்கபலமாகத் திகழ்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரை களுத்துறை நகர சபை உறுப்பினர் ஹிஷாம் ஸுஹைல் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். மேலும் இதே பாடசாலை கடந்த ஆண்டுகளிலும் மாவட்டத்தில் முதலிடங்களைப் பெற்றுள்ளது என பாடசாலை அதிபர் திருமதி ஆய்ஷா ஷாபி அலவி குறிப்பிட்டார்.

# குற்றம் தவிர்

Police Roundup

### கொலைச் சம்பவம்
### அம்பலாங்கொட

அம்பலாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (21) முரண்பாடு நிலை உருவாகியுள்ளதாக 119 என்ற இலக்கத்துக்கு அவசர அழைப்பு கிடைத்த தகவலுக்கமைய அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது நபரொருவர் தலையில் அடிபட்டு இரத்தம் கசிந்து உயிரிழந்த நிலையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் வீட்டாருடன் இடம்பெற்ற முரண்பாடு வலுவடைந்ததால், மகன் தடியால் அவரை தாக்கியுள்ளார். இதன் காரணமாகவே குறித்த நபர் இவ்வாறு உயிரிழந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கலகொட, அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் அவரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### போலி நாணயத்தாள்களுடன் நபரொருவர் கைது
### வீரக்கெட்டிய

வீரக்கெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்ததெமலிய தெற்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் தங்காலை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பின்போது, 11 ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் மேலதிகவிசாரணைகளுக்காகவீரக்கெட்டிய பாலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய அவரின் வீட்டிலிருந்து போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்திய அச்சு இயந்திரமொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், வீரக்கெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது
### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேதவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 17 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சேதவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிந்து நிவாசய பிரதேசத்தில், பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மேலுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 10 கிராம் 790 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய மற்றும் மீதொட்டுமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 37 மற்றும் 35 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவத்த வீதி பிரதேசத்தில், மோதரை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 11 கிராம் 710 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 14ஐச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மோதரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### அங்குலானை

அங்குலானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சயுருபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் அங்குலானை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 10 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அங்குலானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கடவத்தை

கடவத்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிவத்த வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 10 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பியன்வில பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 21 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது
### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் வீதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 3 ஆயிரமும் 10 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபரொருவர் கைது
### கிரிபத்கொட

கிரிபத்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிகந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கிரிபத்கொட பொலிஸ் அதிகாரிகளினால் கிரிபத்கொட மற்றும் எடேரமுல்ல ஆகிய பொலிஸ் நிலையங்களில் பதிவாகியிருந்த விற்பனை நிலையங்களை உடைத்து பொருட்களை திருடிய மூன்று சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரினால் திருடப்பட்ட 20 கிரரெட்டுகள் அடங்கிய 07 சிகரெட்டு பக்கட்டுகள், சி.சி.டிவி. டீ.வீ.ஆர் இயந்திரம், கைபேசி, 111 தொலைபேசி அட்டைகள் மற்றும் மேலும் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மஹர நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிரிபத்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உலக செய்திகள்

## இன்று 28ஆவது நாளாகவும் தொடரும் தாக்குதல்

# பேரழிவில் மரியுபோல்



''எங்களை ஏற்கிறோம் அல்லது ரஷ்யாவுக்கு பயந்து ஏற்கமாட்டோம் என்ற உண்மையை நேட்டோ உடனே கூறவேண்டும்''

- உக்ரைன் ஜனாதிபதி அதிரடி

# மனிதர்களை ஆவியாக்கும் குண்டுகளை வீசும் ரஷ்யா

உக்ரைன் மீது ரஷ்யா இன்று 28ஆவது நாளாகவும் தொடர் தாக்குதல் நடத்திவருகிறது.

இந்நிலையில், மனிதர்களை ஆவியாக்கும் ரொக்கெட் குண்டுகளை உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ச்சியாக ஏவும் வீடியோ வெளியாகியுள்ளது.

உக்ரைனின் துறைமுகப் பகுதியான மரியுபோல் நகரத்தை நோக்கி நொடிக்கு ஒருமுறை இந்த குண்டுகள் வீசப்பட்டன. அப்போது தரையிலிருந்த புற்களும் பற்றியெரிந்தன.

ஆவியாக்கும் குண்டுகள் மற்ற குண்டுகளை விட ஆபத்தானவை என்று கூறும் விஞ்ஞானிகள், இந்த குண்டுகள் வெடிக்கும்போது, ஒரு பெரிய தீப்பந்தத்தை உருவாக்க சுற்றியுள்ள பகுதியில் ஒட்சிசனை உறிஞ்சுகின்றன. இதனால் அந்தப் பகுதியில் இருக்கும் மனிதர்கள் ஆவியாகி விடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உக்ரைன் ஜனாதிபதி அதிரடி

''உக்ரைனை ஏற்கிறோம் அல்லது ரஷ்யாவுக்கு பயந்து ஏற்கமாட்டோம் என்ற உண்மையை நேட்டோ கூட்டமைப்பு உடனே வெளிப்படையாக கூறவேண்டும்'' என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் சேர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்நாட்டின் மீது போர் தொடுத்துள்ள ரஷ்ய இராணுவம், தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல், சுமி உள்ளிட்ட நகரங்களில் 27ஆவது நாளாக தொடர்ந்து நேற்றும் தாக்குதலை நடத்தியது.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சு நடத்தாமல் போர் நிறுத்தம் சாத்தியமே இல்லை என்று உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். இதைவிடுத்து வெறுமன பேச்சுவார்த்தைகளை நீடித்துக் கொண்டே செல்வதால் எந்த பயனும் இல்லை. போர் நீண்டுகொண்டே இருந்தால் 3ஆம் உலகப் போர் வெடிக்கவும் வாய்ப்புள்ளது எனவும் ஸெலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

### போராட்டத்தில் ஈடுபட்ட உக்ரைனியர்கள் மீது துப்பாக்கிச்சூடு

உக்ரைன் கெர்சன் நகரை விட்டு வெளியேறுமாறு போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது ரஷ்யப் படைகள் துப்பாக்கிச்சூடு நடத்திய சிசிடிவி காட்சிகள் வெளியாகியுள்ளன. கெர்சன் நகரவீதியில் ரஷ்யப் படைகளின் ஆக்கிரமிப்பை கண்டித்து மக்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதியில் திரண்ட மக்கள் மீது ரஷ்ய வீரர்கள் துப்பாக்கியில் சுட்டும், கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் விரட்டி அடித்தனர். ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் நிலைகுலைந்த மக்கள் அலறியடித்து ஓடினர்.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா போர்த் தொடுத்தது. தொடர் தாக்குதல்களால் உக்ரைனின் பல்லேறு நகரங்களை கைப்பறியுள்ள ரஷ்யா, தலைநகர் கீவ்வை கைப்பற்றும் நோக்குடன் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

''மரியுபோல் நகரில் பேரழிவு ஏற்படுத்துவோம்'' என எச்சரித்தும் ரஷ்யாவிடம் சரணடைய உக்ரைன் அரசு மறுத்துவிட்டது. ஆயுதங்களை கீழே போடும் பேச்சுக்கே இடமில்லை என உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்ய இராணுவம், தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல், சுமி உள்ளிட்ட நகரங்களில் இன்று 28ஆவது நாளாக தொடர்ந்து தாக்குதலை



நடத்தி வருகிறது. மரியுபோல் நகரம் இப்போரில் மிகக் கடுமையாக உருக்குலைந்துள்ளது. இங்கு சுமார் 4 இலட்சம் மக்கள் உயிர் தப்பிக்க தினம் தினம் செத்துப் பிழைக்கின்றனர். இங்குள்ள பொதுமக்கள் அடைக்களம் அடைந்துள்ள திரையரங்கு, பாடசாலை மீது ரஷ்யா குண்டுவீசி தாக்கியுள்ளது. இக்கட்டடங்களின் அடியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், மரியுபோலின் பெரும்பாலான பகுதிகளை நாசம் செய்துள்ள ரஷ்ய இராணுவம், இந்நகரிலுள்ள உக்ரைன் படைகள் ஆயுதங்களை கீழே போட்டு சரணடைய வேண்டும், மனிதாபிமான பாதை வழியாக நகரை விட்டு வெளியேற வேண்டும், இல்லாவிட்டால் பேரழிவு ஏற்படும், அதிகாலை 5 மணிக்குள் உக்ரைன் இராணுவம் சரணாகதி அடைய வேண்டும் என கெடு விதித்தது.

ஆனால், அடுத்த சில மணி நேரங்களிலேயே சரணடைய மறுப்புத் தெரிவித்தது உக்ரைன் அரசு. அந்நாட்டின் துணைப் பிரதமர் இரினா வெரேஷ்சுக் வெளியிட்ட அறிக்கையில், ''சரணடைதல், ஆயுதங்களை கீழே போடுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. இது குறித்து ரஷ்ய தரப்பிற்கு ஏற்கனவே நாங்கள் தெரிவித்துவிட்டோம்'' என்றார்.

உக்ரைன் சரணடைய மறுத்த நிலையில் அங்கு மீண்டும் குண்டுகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்துகிறது. மரியுபோலில் அனைத்து தெருக்களிலும் மோதல் இடம்பெறுவதாகவும், அனைத்து வீடுகளும் இடிபாடுகளுக்குள்ளாகியிருப்பதாகவும் அங்கிருந்து தப்பி வந்த மக்கள் கண்ணீர் விட்டு கதறுகின்றனர்.

இதேபோல் தலைநகர் கீவ் நகரில் வணிக வளாகம் மீது நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 8 பொதுமக்கள் பலியாகினர்.

கிழக்கு உக்ரைனிலுள்ள சுமியின் புறநகரான சுமைகிம்போர்ம் பகுதியிலுள்ள இரசாயன ஆலை மீது ரஷ்ய இராணுவம் குண்டுகளை வீசி தாக்கியது. இதன் காரணமாக, ஆலையிலுள்ள 50 தொன் டேங்கிலிருந்து அமோனியா வாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆலையிலிருந்து 1.5



கி.மீ. தொலைவில் நோவோசெலிட்ச் கிராமத்தில் அமோனியா வாயு பரவியுள்ளது. தலைநகர் கீவ்வை கைப்பற்ற ரஷ்யா தொடர்ந்து போராடினாலும், அப்படையால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காணமுடியவில்லை என பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, உக்ரைனின் அழைப்பை ஏற்று, ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் மத்தியஸ்தம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

### பைடன் போலந்து பயணம்

உக்ரைனில் போர் நடத்திவரும் ரஷ்யா, அண்டை நாடுகளான போலந்து, ருமேனியா எல்லையை ஒட்டியும் குண்டுவீசி தாக்குதல் நடத்துகிறது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், போலந்துக்கு இந்த வாரம் பயணம் செய்யவிருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

புருசெல்ஸிற்கு செல்லும் பைடன், அங்கிருந்து போலந்து சென்று ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை சந்திக்கவுள்ளார். இந்த உயர்மட்ட ஆலோசனையில் நேட்டோ நாடுகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தினால் பதிலடி தருவது தொடர்பாக ஆலோசனை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தனித்துநின்று மேற்குலகுக்கு சவால்விடும் ரஷ்யா

மொத்த மேற்கு உலகமும் சேர்ந்து வந்தாலும், பொருளாதாரத் தடைகளை பற்றி கவலைப்படாமல் உக்ரைன் மீது தொடர்ந்து ரஷ்யா தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தப் போரில் ரஷ்யா தனித்துவிடப்பட்டு இருந்தாலும், அதை பற்றியெல்லாம் புட்டின் கவலைபடுவதாக தெரியவில்லை.

''நாங்கள் எங்கள் நாட்டை பாதுகாக்க விரும்புகிறோம். உக்ரைன் மேற்குலக நாடுகளின் பேச்சை கேட்டு ஆடுகிறது. உக்ரைன் மக்களே அந்நாட்டு அரசின் செயல்பாடுகள் பிடிக்கவில்லை. உக்ரைனில் நடக்கும் இன அழிப்பை தடுக்கும் வகையிலும், அங்கு நல்ல அரசை நிறுவும் வகையிலும் நாங்கள் உக்ரைன் உள்ளே அமைதிப்படையை அனுப்புகிறோம்.

சிறப்பு இராணுவ ஒப்பரேஷனை மேற்கொள்ளும் வகையில் நாங்கள் அமைதிப்படையை உள்ளே அனுப்புகிறோம்'' என்று புட்டின் ரஷ்ய - உக்ரைன் போரின் முதல்நாள் தெரிவித்திருந்தார். அப்போது தொடங்கிய போர் கடந்த ஒரு மாதமாக நீடித்து வருகிறது.

### பொருளாதாரத் தடைகள்

கடந்த ஒரு மாதத்தில் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. நேட்டோ நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பா என்று மேற்குலக நாடுகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்துவந்து



ரஷ்யாவின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ரஷ்யாவின் எண்ணெய்களை வாங்க மாட்டோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. அதேபோல் ரஷ்யாவை பணப்பரிவர்த்தனை மெசேஜிங் தளமான swiftஇலிருந்தும் உலக நாடுகள் நீக்கியுள்ளன.

அத்தோடு ரஷ்யாவின் அலிகார்க்ஸ் கணக்குகளும் உலகம் முழுக்க பல்வேறு நாடுகளில் முடக்கப்பட்டுள்ளன. ரஷ்யா மீது கணக்கில் அடங்காத பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால், இதையெல்லாம் எதிர்பார்க்காமல் களத்தில் இறங்கவில்லை. உக்ரைன் மீது போர் தொடுத்தால் பின்விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதை எதிர்பார்த்தே ரஷ்யா களமிறங்கியது. இதற்கு பதிலடியாக ரஷ்யாவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

### ரஷ்யா அசைந்து கொடுக்கவில்லை

ரஷ்யாவிலிருக்கும் வெளிநாட்டு நிறுவனங்களை மொத்தமாக ரஷ்ய அரசு பறிமுதல் செய்தது. ரஷ்யாவிலிருக்கும் வெளிநாட்டு விமானங்களை பறிமுதல் செய்தது. அமெரிக்காவுடன் விண்வெளி ஆராய்ச்சியிலுள்ள உறவை முறித்துக்கொண்டது. அதேபோல் எதிர்வரும் நாட்களில் உலக நாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்வதிலும் ரஷ்யா கறார் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் உலக நாடுகளுக்கு அதிகளவு யுரேனியம் ஏற்றுமதி செய்யும் நாடு ரஷ்யா என்பதால் பல்வேறு நாடுகள் பாதிப்படைய தொடங்கியுள்ளன.

இந்த பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா பாதிக்கப்பட்ட அளவுக்கு அமெரிக்காவும் பாதிக்கப்பட்டு வருகிறது. போதிய எண்ணெய் இல்லாமல், எரிவாயு இல்லாமல் அமெரிக்கா ஈரான், வெனிசூலா போன்ற பகையாளிகளிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ரஷ்யா இந்தப் போரில் பின்னடைவை சந்தித்துள்ளதாக மேற்குலக நாடுகள் செய்திகளை வெளியிட்டு வந்தாலும் கூட ரஷ்யா என்னவோ, நாங்கள் திட்டமிட்டபடி சென்றுகொண்டிருக்கிறோம். போரில் நாங்கள் பின்னடைவை சந்திக்கவில்லை.என உறுதியாக சொல்லி வருகிறது.

இந்தப் போரின் தொடக்கத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள்தான் சமூக வலைத்தளத்தில் ஆதிக்கம் செலுத்தியது. பைடனுக்கு சாதகமான செய்திகள், கடுமையான விமர்சனங்கள் அதிகம் வைக்கப்பட்டன. ஆனால், அங்கும் தற்போது ரஷ்யா ஆதிக்கம் செலுத்திவருகிறது. உக்ரைனில் அமெரிக்கா நிறுவியுள்ள பயோ நிறுவனங்களை வைத்து பயோ ஆயுத எச்சரிக்கையை ரஷ்யா விடுத்தது இதில் மிக முக்கியமான திருப்பமாக பார்க்கப்படுகிறது.

### ஐ.நா. - சர்வதேச நீதிமன்றம்

ரஷ்யா தரப்பு நியாயமும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே தெரியத் தொடங்கியுள்ளது. அதோடு ஐ.நாவில் தாக்கல் செய்யப்படும் தீர்மானங்களையும் கூட ரஷ்ய ஜனாதிபதி புட்டின் பெரிதாக சட்டை செய்துகொள்வதில்லை. ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தை ரஷ்யா வீட்டோ செய்தது. அதேபோல் சர்வதேச நீதிமன்றம் கொடுத்த போர் நிறுத்த உத்தரவை, பின்பற்ற மாட்டோம் என்று வெளிப்படையாக அறிவித்தது. சர்வதேச அமைப்புகளில் அழுத்தம் எதுவும் ரஷ்யாவை எந்த வகையிலும் பாதிக்கவில்லை.

### ரஷ்யா எச்சரிக்கை

ரஷ்யா மீது பயம் இருப்பதாலேயே உக்ரைன் வான்பகுதியை மூட உலக நாடுகள் விரும்பவில்லை. அப்படி செய்தால் அது ரஷ்யாவுடன் நேரடி போருக்கு வழி வகுக்கும், ரஷ்யாவிடம்தான் உலகிலேயே அதிக அணு ஆயுதங்கள் உள்ள நிலையில், இதை மேற்குலக நாடுகள் விரும்பாது. இந்த எச்சரிக்கையை ரஷ்யாவும் விடுத்துள்ளது. அதோடு ரஷ்யாவின் மசகு எண்ணெயை நம்பித்தான் இப்போது ஐரோப்பா நாடுகள் உள்ளன. இதனால் ரஷ்யாவை நேரடியாக எதிர்க்க முடியாமல் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் திணறி வருகின்றன.

### கைவிட்ட சீனா

இந்த போர் விடயத்தில் ரஷ்யாவை சீனா தொடக்கத்தில் தீவிரமாக ஆதரித்தது. ஆனாலும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் வரலாம் என்ற அச்சம் காரணமாக சீனா இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஒதுங்கி வருகிறது. சீனா ரஷ்யாவை முன்பு ஆதரித்த அளவிற்கு இப்போது தீவிரமாக ஆதரிக்கவில்லை என்பதே நிதர்சனம். சீனா அதேபோல் ரஷ்யாவிற்கு ஆயுத உதவிகளை வழங்க மாட்டோம் என்றும் அறிவித்துவிட்டது. ஆனால், இதெல்லாம் ரஷ்யாவை பாதித்தது போல் தெரியவில்லை.

தொடர்ந்து ரஷ்யா உக்ரைன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. சீனாவின் நேரடி உதவி இன்றியே ரஷ்யா இதில் தனித்து போரிட்டு வருகிறது. கிட்டத்தட்ட நேட்டோ நாடுகள் 30, நேட்டோ அல்லாத 10 நாடுகள் என்று 40 நாடுகள் வரை ரஷ்யாவை எதிர்க்கின்றன. இதில் ரஷ்யா பிற நாடுகளின் நேரடி (சிரியா தவிர) ஆதரவின்றி தனி ஆளாக போராடிக்கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் கூட மேற்குலகத்தின் முன் ரஷ்யா மண்டியிட மறுத்து வருகிறது என்பதே நிதர்சனம்.. போர் இன்னும் செல்ல செல்ல என்ன நடக்கும்.. ரஷ்யா பக்கம் வேறு நாடுகள் இணையுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# ரஷ்ய வீராங்கனைக்கு இரு ஆண்டுகள் தடை!

## வென்ற தங்கப் பதக்கங்கள் பறிமுதல்




ரஷ்ய நடைப்பந்தய வீராங்கனை யெலினா லாஷ்மனோவா மீதான ஊக்க மருந்து குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்திய உலக தடகள நேர்மை சபை அவருக்கு 2 ஆண்டுகள் தடை விதித்துள்ளது. அத்துடன் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 2014ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி வரையிலான அவரது போட்டிகளின் முடிவுகளை தகுதி நீக்கம் செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

இதனால் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி மற்றும் 2013ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப் போட்டியில் 20 கிலோ மீட்டர் தூர நடைப்பந்தயத்தில் அவர் வென்ற தங்கப் பதக்கங்கள் பறிமுதல் செய்யப்படுகிறது.




# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# சதுரங்கம், மேசைப் பந்தில் செங்கலடி கோல்ட் ஸ்டார் வி.க. சம்பியனானது

(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட மட்ட விளையாட்டு விழாவில் சதுரங்கம், மேசைப் பந்தாட்டம், கரம் ஆகிய போட்டிகள் அண்மையில் மட்டக்களப்பு மெதடிஸ் கல்லூரி உள்ளரங்கில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுக்களில் ஆண் மற்றும் பெண்களுக்கான சதுரங்கம், ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டம் போட்டிகளில் ஏறாவூர்பற்றுப் பிரதேசம் சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. கரம் போட்டியில் பெண்கள் பிரிவில் மண்முனை வடக்கு அணி முதலிடத்தையும், ஏறாவூர்ப்பற்று அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.



# ‘ரோட் சேஃப்டி வேல்ட் சீரிஸ்’ தொடர் ஜூன் 4ஆம் திகதி ஆரம்பம்

சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்கும் இரண்டாவது ரோட் சேஃப்டி வேல்ட் சீரிஸ் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 3ஆம் திகதிவரை இந்தியாவின் லக்னோவ், இந்தூர் மற்றும் ஜோத்பூர் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்றிருந்த இந்தத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்திய லெஜண்ட்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றிருந்ததோடு, இரண்டாம் இடத்திற்கான பட்டத்தினை இலங்கை லெஜண்ட்ஸ் அணியினர் வென்றிருந்தனர்.




குறித்த இந்தத் தொடரின் இரண்டாவது பருவகாலம் கடந்த ஆண்டு நடைபெறுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், கொவிட்-19 தொற்று காரணமாக தொடர் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், கடந்த மாதம் இந்த போட்டித்தொடர் ஆரம்பமாகும் என்ற தகவல்கள் வெளியாகியிருந்தாலும், தற்போது, ஜூன் - ஜூலை மாதங்களில் நடைபெறும் என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முதல் தடவையாக நடைபெற்ற தொடரில் இலங்கை, இந்தியா, மே.இ.தீவுகள், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடியிருந்தன. இந்த ஆண்டு நடைபெறவுள்ள குறித்த தொடரில் புதிய அணியாக நியூசிலாந்து லெஜண்ட்ஸ் அணி இணைந்துகொண்டுள்ளது.

குறித்த தொடரானது இந்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆதரவுடன் நடைபெற்றுவருவதுடன், இந்தத் தொடரானது வீதி பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத் சம்பியன் கிண்ணத்தை வென்றது மருதமுனை ஒலிம்பிக் வி. கழகம்

(பெரியநீலாவணை நிருபர்)

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையோடு, அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் 2019ஆம் ஆண்டு நடத்திவந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அழைப்பு வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



இறுதிப்போட்டியில் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகம் விளையாடியது. இந்த போட்டியில் 2-0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் ரிஷாத் சம்பியன் கிண்ணத்தை மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் தம்வசப்படுத்திக் கொண்டது.

சம்பியன் கிண்ணத்தை வென்ற ஒலிம்பிக் விளையாட்டு கழகத்தினருக்கு ரூ.50 ஆயிரம் பணப் பரிசையும், சம்பியன் வெற்றிக் கிண்ணத்தையும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியுதீன் வழங்கிவைத்தார். இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட மருதமுனை எவரெடி விளையாட்டு கழகத்தினருக்கு ரூ.25 ஆயிரம் பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான வை.கே. றஹ்மான் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்ஸின் பக்கீர், ரிப்கான் பதியுதீன், யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் வை. நிஸ்வி யஹ்சர் (கணக்காளர்), செயலாளர் ரஜி (ஆசிரியர்), அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளரும், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம். அப்துல் மனாப் உட்பட பல முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# மின்னொளி மென்பந்து கிரிக்கெட்டில் சம்பியனான சம்மாந்துறை யுனிட்டி

(கல்முனை, மாளிகைக்காடு நிருபர்கள்)

காரைதீவு வரலாற்றில் முதன்முறையாக காரைதீவு பயர் விளையாட்டுக் கழகம், அஸ்கோ அமைப்புடன் இணைந்து நடத்திய மின்னொளியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காரைதீவு விபுலானந்தர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 32 தமிழ், முஸ்லிம், சிங்கள விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கும், சம்மாந்துறை யுனிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சம்மாந்துறை யுனிட்டி விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் 4.2 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 31 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இஷ்ரத் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 23 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்கு 32 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை யுனிட்டி விளையாட்டுக் கழகம் ஆரம்பம் முதல் அதிரடியாக துடுப்பெடுத்தாடி வந்த நிலையில் 4.2 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.





தொடராட்டக்காரர் விருதை சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழக வீரர் அதிப் தனதாக்கிக் கொண்டார். இறுதியாட்ட நாயகனாக சம்மாந்துறை யுனிட்டி விளையாட்டுக் கழக வீரர் நஜாத் தெரிவானார். தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக பிளாஸ்டர் அணியின் றிழ்வான், அதிக ஓட்டங்களை குவித்த வீரராக முஸாபிர் தெரிவானர். பரிசளிப்பு நிகழ்விற்கு அஸ்கோ அமைப்பின் செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் அதிதிகளாக கலந்துகொண்டு வெற்றிக்கேடயங்களை வழங்கினர்.

# ஐ.பி.எல்லில் சதம் அடித்த அதிக வயதான வீரர்கள்

(அக்ஷரா)

கிரிக்கெட் மட்டுமல்லாது எந்தவொரு விளையாட்டிலும் விளையாடும் தரமான திறமை வாய்ந்த வீரர்களுக்கு வயது என்பது தடை கிடையாது. வயது போகப்போக ஒருசில வீரர்கள் தங்களின் இளம் வயதில் செயல்பட்டதைவிட அபாரமாக செயல்பட்டு வயது வெறும் நம்பர் என நிரூபித்த தருணங்கள் ஏராளமாக உள்ளன. அந்த வகையில் ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் அதிக வயதில் சதமடித்த டொப் 5 வீரர்களின் பட்டியல்

### ஷேன் வொட்சன்

சி.எஸ்.கே. அணியில் விளையாடிய அவுஸ்திரேலியாவை சேர்ந்த நட்சத்திர ஓல்ரவுண்டர் ஷேன் வொட்சன் 2018ஆம் ஆண்டு மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற ஹைதராபாத் அணியுடனான இறுதிப் போட்டியில் ஆரம்பம்முதல் அதிரடியை வெளிப்படுத்தினார். வெறும் 57 பந்துகளில் 11 பவுண்டரிகள் மற்றும் 8 சிக்சர் உட்பட சதம் அடித்து ஆட்டமிழக்காது 117 ஓட்டங்கள் விளாசி கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சதம் அடித்தபோது வயது 36 வருடம் 244 நாட்களாகும்.



### சச்சின் டெண்டுல்கர்

சச்சின் டெண்டுல்கர் தனது சொந்த ஊரான மும்பைக்கு விளையாடி தனக்கென ஒரு முத்திரை பதித்தவர். ஆரம்ப காலங்களில் அந்த அணியின் தலைவராக விளையாடிய அவர், கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். தொடரில் கொச்சி அணிக்கு எதிரான போட்டியில் 66 பந்துகளில் 12 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்சர்கள் உட்பட ஆட்டமிழக்காது 100 ஓட்டங்கள் எடுத்தார். அந்தப் போட்டியில் மும்பை தோற்ற போதிலும் 37 வருடம் 356 நாட்கள் வயதில் சதமடித்த அவர், ஐ.பி.எல். வரலாற்றில் அதிக வயதில் சதம் அடித்த வீரர் பட்டியலில் 4ஆவது இடம்பிடித்துள்ளார்.




### கிறிஸ் கெயில்

மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த கிறிஸ் கெயில் பல சாதனைகளைப் படைத்த ஒரு ஜாம்பவான் எனக் கூறலாம். கடந்த 2018ஆம் ஆண்டு ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் வெறும் 63 பந்துகளில் 104 ஓட்டங்கள் விளாசி சதம் அடித்தார். அப்போது 38 வருடம் 210 நாட்கள் வயதை கடந்திருந்த அவர் இந்தப் பட்டியலில் 3ஆவது இடம் பிடித்துள்ளார்.




### சனத் ஜெயசூரிய




மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடிய இலங்கை அணியின் அதிரடி வீரர் சனத் ஜெயசூரிய கடந்த 2008ஆம் ஆண்டு சி.எஸ்.கே. அணிக்கு எதிராக மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த போட்டியில் 48 பந்துகளில் 9 பவுண்டரி மற்றும் 11 சிக்சர்கள் உட்பட சதம் விளாசி ஆட்டமிழக்காது 114 ஓட்டங்கள் எடுத்து மும்பையை வெற்றிபெறச் செய்தார். அந்த சதம் அடித்த போது அவரின் வயது 38 வருடம் 319 நாட்கள் என்பதால் இந்தப் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ளார்.

### அடம் கில்கிறிஸ்ட்

ஆஸி. அணியின் விக்கெட் காப்பாளரான அடம் கில்கிறிஸ்ட் கடந்த 2011ஆம் ஆண்டு பஞ்சாப் அணிக்கு கெப்டனாக செயல்பட்டார். தரம்சாலாவில் நடந்த ஆர்.சி.பி. அணிக்கு எதிரான லீக் போட்டியில் அதிரடியாக பேட்டிங் செய்து 55 பந்துகளில் 8 பவுண்டரி மற்றும் 9 சிக்ஸர்கள் உட்பட சதமடித்து 106 ஓட்டங்கள் விளாசினார். தனது 39 வருடம் 184 நாட்கள் வயதில் இந்த அபார சதமடித்து ஆட்டநாயகன் விருது வென்ற அவர் ஐ.பி.எல். வரலாற்றில் மிக அதிக வயதில் சதம் அடித்த வீரர் மற்றும் கெப்டன் என்ற இரட்டைப் பெருமைகளுடன் சாதனைகளைப் படைக்க வயது ஒரு தடையல்ல என நிரூபித்தார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7